விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பத்து

சங்கு 09 வள்ளுவர் ஆண்டு 2039 பங்குனி 20 புதன்கிழமை (02.04.2008) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 105

SATS TECH
யாழ்.நகரின் முன்னணி
Satellite & Cable TV நிறுவனம்
DIAL 021 222 5908

## ‘பிரபாகரன்’ திரைப்படத்தை அழிக்கக் கோரி வழக்குத் தாக்கல்

(சென்னை)

தமிழர்களை இழிவுபடுத்தும் வகையிலான ‘பிரபாகரன்’ என்ற பெயரிலான சிங்களத் திரைப்படத்தை கையகப்படுத்தி மத்திய அரசு அழிக்க வேண்டும் என்றும் அப்படத்தை சென்னை வண்ணக் கலையகத்தில் இருந்து வெளியே எடுக்க இலங்கைத் துணைத் தூதுவர் ஹம்சா மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்றும் வலியுறுத்தி தமிழ்நாடு உயர் நீதிமன்றத்தில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல்.திருமாவளவன் வழக்குத் தொடர்ந்துள்ளார்.

தொல்.திருமாவளவன் நேற்றுத் தாக்கல் செய்த மனுவில் கூறப்பட்டுள்ளதாவது, ‘பிரபாகரன்’ என்ற சிங்களத் திரைப்படம் தமிழர்களை இழிவுபடுத்தும் வகையிலான காட்சிகளைக் (10 ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சர்களின் எண்ணிக்கையை குறைக்க ஜனாதிபதி மகிந்த முடிவு

(கொழும்பு)

அமைச்சரவையில் கபினட் அமைச்சர்களின் எண்ணிக்கையை 35 ஆகக் குறைக்க ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முடிவு செய்துள்ளதால் அமைச்சர்களிடையே பதற்றம் ஏற்பட்டுள்ளது.

வாழ்க்கைச் செலவீனங்கள் மற்றும் பாதுகாப்புக்கு மேலதிக நிதி ஒதுக்கீடு ஆகிய காரணங்களால் அமைச்சரவையின் எண்ணிக்கையைக் குறைக்க மகிந்த முடிவு செய்திருப்பதாகவும் கூறப்படுகின்றது.

மகிந்தவின் முடிவையடுத்து கபினட் அமைச்சர்களின் எண்ணிக்கை 35 ஆக விரைவில் குறைக்கப்படலாம் எனத் தெரிகின்றது. இதனால் கபினட் அமைச்சர்களில் யாரினது பதவி பறிபோகும் என்ற பதற்றத்தில் அமைச்சர்கள் இருப்பதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. (ச-5)

# கிழக்கு மாகாண சபைத் தேர்தலில்

# ஐ.தே.கட்சியுடன் மு.கா.கூட்டணி

## ஹிஸ்புல்லா அரச தரப்பில் போட்டி

(கொழும்பு)

கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் யானைச் சின்னத்தின் கீழ் இணைந்து போட்டியிடுவதற்கு ஐக்கிய தேசியக் கட்சியும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸும் இணக்கம் கண்டுள்ளன. நேற்று இரு கட்சிகளின் தலைவர்களுக்குமிடையில் இடம்பெற்ற பேச்சுவார்த்தையின்போதே இவ் இணக்கம் காணப்பட்டுள்ளது. இதேவேளை எம். எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா அரசுடன் இணைந்து போட்டியிடவுள்ளார். (10 ஆம் பக்கம் பார்க்க)

## சிறைச்சாலையை உடைத்து தப்பியோடிய கைதிகள் மீது சூடு

### நால்வர் பலி; மூவர் காயம்

(கொழும்பு)

இரத்தினபுரி குருவிட்ட பகுதியில் அமைந்துள்ள சிறைச்சாலையை உடைத்து நேற்றுக் காலை தப்பிச் செல்ல முயன்ற கைதிகள் மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் நால்வர் உயிரிழந்தனர். மூவர்படுகாயமடைந்துள்ளனர்.

தப்பியோடிய கைதிகளை நிற்குமாறு சிறைச்சாலைக் காவலர்கள் எச்சரித்தபோதிலும் அவர்கள் (10 ஆம் பக்கம் பார்க்க)

## மின்னல் தாக்கி 4 படையினர் பலி; 59 பேர் காயம்

(கொழும்பு)

பொலநறுவை மாவட்டம் மின்னேரியாவில் படையினரின் பயிற்சித் தளத்தில் மின்னல் தாக்கி 4 படையினர் உயிரிழந்தனர். 59 படையினர் காயமடைந்துள்ளனர்.

மின்னேரியாக் கட்டுக்கெலியாவ தரைப் படைப் பயிற்சித் தளத்தில் நேற்றுப் பிற்பகல் 5 மணியளவில் பயிற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த படையினரை மின்னல் தாக்கியுள்ளது. (10 ஆம் பக்கம் பார்க்க)

## சத்துணவுத் திட்டத்தில் மோசடி நிகழ்ந்தால் சம்பந்தப்பட்டவர்கள் மீது கடும் நடவழிக்கை

### கல்வி அமைச்சின் செயலாளர் இளங்கோவன் எச்சரிக்கை

(திருகோணமலை)

உலக உணவுத் திட்டத்தின் கீழ் பாடசாலை மாணவர்களுக்கு வழங்கப்படும் சத்துணவுத் திட்டத்தில் மோசடி நடைபெறுமாயின் அதில் சம்பந்தப்பட்டவர்கள் மீது கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என வடமாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் எல்.இளங்கோவன் வலம்புரிக்குத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், சத்துணவுத் திட்டத்தின் கீழ் மாணவர்களுக்கு வழங்குவதற்கென கையளிக்கப்படும் உணவுப் பொருள்கள் அவர்களுக்கு வழங்காது பதுக்கி வைத்து விற்பனை செய்யப்படுவதாக முறையிடப்பட்டுள்ளது.

அத்துடன் யாழ்.மாவட்ட செயலக முகாமைத்துவப் பிரிவு அலுவலர்களும் உலக உணவுத் திட்ட உப அலுவலக அலுவலர்களும் இணைந்து மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின்போது பதுக்கல்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு உணவுப் (10 ஆம் பக்கம் பார்க்க)

## ஓ.எல். பெறுபேறுகள் நேற்று வெளியாகின

(கொழும்பு)

கல்விப் பொது சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகள் நேற்றுக் காலை வெளியிடப்பட்டுள்ளதாகப் பரீட்சைகள் ஆணையாளர் அநுர எதிரிசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பு மற்றும் ஜெயவர்த்தனபுர கல்வி வலயங்களைச் சேர்ந்த பெரும்பாலான பாடசாலை (10 ஆம் பக்கம் பார்க்க)

## அநுராதபுரம் பாதுகாப்பு விசேட அதிரடிப் படை பொறுப்பு

(கொழும்பு)

அநுராதபுர மாவட்டத்தின் பாதுகாப்புப் பொறுப்பு விசேட அதிரடிப்படையினரிடம் வழங்கப்பட்டுள்ளது. ஹெப்பிட்டிக்கொல்லாவ, துட்டுவேவ மற்றும் நிகவேவ ஆகிய தாக்குல்கள் நடைபெற்று வரும் பகுதியில் அதிரடிப் படையினர் குவிக்கப்பட்டுள்ளனர்.

விடுதலைப்புலிகளால் தாக்கப்படும் பகுதிகள் வரையறுக்கப்பட்டு அப் பகுதியில் 9 அதிரடிப் படை முகாம்கள் அமைக்கப்பட்டிருப்பதாக விசேட அதிரடிப் படையின் நிர்வாகி எம். எல்.சரத் சந்திர தெரிவித்துள்ளார்.

அநுராதபுரத்திலிருந்து 57 கிலோமீற்றர் நீள வீதியில் (10 ஆம் பக்கம் பார்க்க)

## படையினரும் புலிகளும் பரஸ்பர எறிகணை வீச்சு

(மன்னார்)

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் படையினருக்கும் இடையில் நேற்று அதிகாலை முதல் உயிலங்குளம் மற்றும் மாந்தை மேற்குப் பகுதிகளில் கடும் சண்டை இடம்பெற்றுள்ளது.

இதனைத் தொடர்ந்து படையினர் மன்னார் தள்ளாடி படை (10 ஆம் பக்கம் பார்க்க)

மிதிவெடி விழிப்புணர்வு தினம் : ஏப்ரல் 1 - 14

மிதிவெடிகள், வெடிபொருள்களால்

பாதிக்கப்பட்டோரும் சமூகத்தில் ஒரு அங்கத்தவரே.

‘சர்வோதயம்’ ‘யுனிசெவ்’

# விடுதலைப் புலிகளுடன் இணைந்து தேர்தலில் போட்டியிடவில்லை

## ஜனாதிபதியின் குற்றச்சாட்டுக்கு ஐ.தே.க. மறுப்பு

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுடன் இணைந்து கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி போட்டியிடுவதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முன்வைத்த குற்றச்சாட்டை அந்தக் கட்சி மறுத்துள்ளது.

விடுதலைப் புலிகளுடன் இணைந்து கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் போட்டியிட வேண்டிய தேவை தமக்கு இல்லை என நேற்று கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் தெரிவித்த ஐக்கிய தேசியக் கட்சியின் பேச்சாளர் கஜந்த கருணாதிலக, ஜனாதிபதி முன்வைத்திருக்கும் குற்றச்சாட்டை மறுத்துள்ளார்.

தனித்தே நின்று கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடுவோம். தேவை ஏற்பட்டால் அங்கீகரிக்கப்பட்ட கட்சிகளுடன் இணைந்து போட்டியிடுவோம்.

விடுதலைப் புலிகளுடன் இணைந்து நாங்கள் போட்டியிடவில்லை. கடந்த 2005 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷவே விடுதலைப் புலிகளுடன் இணைந்து போட்டியிட்டவர் என்றார் அவர்.

கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் வெற்றி பெற முடியாது என அரசாங்கம் கருதினாலே தேர்தலை ஒத்திவைப்பதற்கு முயற்சிக்கும் எனத் தெரிவித்திருக்கும் கஜந்த கருணாதிலக, தேர்தலை ஒத்திவைப்பது தொடர்பாக அரசாங்கம் முயற்சிப்பது பற்றி அரசாங்க உறுப்பினர்கள் மூலம் தெரியவருவதாகக் கூறினார்.

தேர்தல் தமக்கு சாதகமாக அமையாத பட்சத்தில் தேர்தலை அரசாங்கம் ஒத்திவைக்கும் என்ற சந்தேகம் தோன்றியிருப்பதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பேச்சாளர் குறிப்பிட்டார்.

கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடவிருக்கும் அனைத்து வேட்பாளர்களுக்கும் அரசாங்கம் சம அளவில் பாதுகாப்பை வழங்கவேண்டும். தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கமே பாதுகாப்பு வழங்க வேண்டும்.

பிள்ளையான் குழுவினரே வேறெந்தக் குழுவினரோ ஆயுதங்களுடன் செயற்படுவதற்கு அனுமதிக்கப்படக் கூடாது என ஐக்கிய தேசியக் கட்சியின் பேச்சாளர் கஜந்த கருணாதிலக ஊடகவியலாளர் மாநாட்டில் கோரிக்கை விடுத்தார். (எ-5)

## வலய மட்டத்தில் தெரிவு

(யாழ்ப்பாணம்)

வடமாகாண கல்வித் திணைக்களம் 2007ஆம் ஆண்டு நடத்திய ஆரம்பக் கல்வி மாணவர்களுக்கான எழுத்தாக்கத்திறன் போட்டியில் யாழ்.நல்லூர் காசிப்பிள்ளை வித்தியாலய மாணவி செல்வி ப.சிவப்பிரீமி வலய மட்டத்தில் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக பாடசாலை அதிபர் கே.வடிவேல் அறிவித்துள்ளார். (இ)

## காங்கேசன்துறை தபாலகம் இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை தபாலகம் இன்று புதன்கிழமையிலிருந்து கே.கே.எஸ்.வீதி, இணுவில், சுன்னாகம் என்ற முகவரிக்கு இடம் மாற்றப்படுவதாக காங்கேசன்துறை அஞ்சல் அதிபர் தெரிவித்துள்ளார்.

மேற்படி அலுவலகம் முன்னர் கே.கே. எஸ் வீதி, உடுவில் கிழக்கு,சுன்னாகம் என்ற முகவரியில் இயங்கி வந்தமை குறிப்பிடத் தக்கது. (அ-7)

# பாதுகாப்புத் தரப்பைச் சேர்ந்த ஐவர் விடுதலைப் புலிகள் வசம் உள்ளனர்

## சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கை கடற்படையினர் நான்குபேரும் இராணுவ வீரர் ஒருவருமாக ஐந்து பேர் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருப்பதாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் தொடர்பாடல் அதிகாரி சரசி விஜயரட்ண தெரிவித்துள்ளார்.

கடந்த வருடம் முதல் விடுதலைப் புலிகளால் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இவர்கள் சிறந்த உடல் நலத்துடன் இருப்பதாகவும் அவர்களின் குடும்பங்களை பார்ப்பதற்கு ஒரு முறை அவர்கள் அனுமதிக்கப்பட்டதாகவும் அந்த அதிகாரி பி.பி.சி செய்திச் சேவைக்கு கூறியுள்ளார்.,

இந்த வருட ஆரம்பத்திலிருந்து விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையிலான மோதல்களில் கொல்லப்பட்ட 112 சடலங்களை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் இரண்டு தரப்பினருக்கும் இடையில் பரிமாறியுள்ளது.

விடுதலைப் புலிகளின் தரப்பிலிருந்து எவ்வளவு சடலங்கள் சென்றன, அரசாங்கத் தரப்பிலிருந்து எவ்வளவு சடலங்கள் சென்றன என்று சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் பிரித்துப் பார்க்கவில்லை என்றார் அவர்.

மன்னார், வவுனியா மற்றும் மணலாறு முன்னரங்கப் பகுதிகளில் இரண்டு தரப்புக்களுக்குமிடையில் சடலங்கள் பரிமாறப்பட்டிருப்பதாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் தெரிவித்துள்ளது.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் மீட்கப்படும் சடலங்கள் கிளிநொச்சி வைத்தியசாலையில் கையளிக்கப்பட்டு ஓமந்தை சோதனைச் சாவடியூடாக எடுத்துவரப்படும் என அந்த அதிகாரி தெரிவித்துள்ளார். (எ-5)

## தீவக கல்வி வலய பதில் பணிப்பாளராக இராதாகிருஷ்ணன் நியமனம்

(திருகோணமலை)

தீவக கல்வி வலய பதில் கல்விப் பணிப்பாளராக, தற்போது பிரதிக் கல்விப் பணிப்பாளராகவுள்ள (நிர்வாகம்) வ.இராதாகிருஷ்ணன் நியமிக்கப்பட்டுள்ளதாக வடமாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் எல்.இளங்கோவன் தெரிவித்தார்.

தற்போது தீவக வலயக் கல்விப் பணிப்பாளராக இருந்த ஏ.இராஜேந்திரன் யாழ். கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதை அடுத்து இந் நியமனம் வழங்கப்பட்டுள்ளதாகவும் கல்வி அமைச்சின் செயலாளர் மேலும் குறிப்பிட்டார். (ச-5)

# வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரிக்கு 12 மாணவர்களுக்கு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரிக்கு மேலும் ஒரு தொகுதி மாணவர்கள் தெரிவு செய்யப்பீட்டுள்ளனர்.

தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் பதிவுப் படிவங்களை யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளுமாறு பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் அறிவித்துள்ளார்.

தெரிவு செய்யப்பட்ட மாண வர்களின் விபரம் வருமாறு,

*உடற்கல்வி:-* நல்லதம்பி துவாரகா (கரணவாய்), பரமானந்தன் பாலசங்கர் (துன்னாலை), தர்சினி ஞானலிங்கம் (துன்னாலை), பூபாலசிங்கம் மிதிலா (அள்வெட்டி), டனிஸ்சியா குருஸ் (யாழ்ப்பாணம்), தனஞ்சியன் ஜனார்த்தனன் (வேலணை), ஞானராஜா அருள்ராஜ் (வேலணை).

*இந்துசமயம்:-* என்.சசிகரன் (நீர்வேலி) வை.ஜெகநாதன் (ஏழாலை), இ.கிருஷாந்தி (மானிப்பாய்).

*தகவல் தொழில் நுட்பம்:-* ஆர்.தாரணி (சாவகச்சேரி) ரீ.ரதிகரன் (இளவாலை). (ச-7)

## ஐக்கிய தீபம் வெளிவந்துள்ளது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டக் கூட்டுறவுச் சபையினால் வெளியிடப்படும் ஐக்கிய தீபம் மாத இதழின் மார்ச் மாத வெளியீடு வெளிவந்துள்ளது. (ச)

## ப.நோ.கூ.சங்கங்களுடன் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்திற்கு அத்தியாவசிய சேவைகள் ஆணையாளரூடாக அரசாங்க அதிபரினால் ப.நோ.கூ.சங்கங்களுக்கு வழங்கப்பட்ட பொருட்களின் கொடுப்பனவுகள் ப.நோ.கூ.சங்கங்களினால் தொடர்ச்சியாக செலுத்தப்படாது நிலுவையாகவுள்ளதாக அரச அதிபர் க.கணேஷ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக நீர்வேலி, மானிப்பாய். சங்கானை, கட்டைவேலி -நெல்லியடி, சுன்னாகம்,சாவகச்சேரி, கைதடி மற்றும் நெடுந்தீவு ஆகிய ப.நோ.கூ.சங்கங்களுக்கான அவசர கலந்துரையாடல் ஒன்று இன்று புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு மாவட்டச் செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலுக்கு கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர், மேற்குறிப்பிடப்பட்ட ப.நோ.கூ.சங்கங்களின் தலைவர், பொது முகாமையாளர்களை உரிய ஆவணங்களுடன் தவறாது கலந்து கொள்ளுமாறு அரசாங்க அதிபர் க.கணேஷ் அறியத்தந்துள்ளார். (ச)

# சென்னைத் துணைத் தூதுவர் ஹம்சாவை இடமாற்றக்கோரி ஆர்ப்பாட்டம்

(சென்னை)

சென்னையிலுள்ள இலங்கைத் துணைத்தூதுவர் ஹம்சாவை வெளியேற்றக் கோரி விரைவில் தமிழகத்தின் அனைத்து இயக்கங்களின் சார்பில் மாபெரும் கூட்டு ஆர்ப்பாட்டம் நடத்தப்படவுள்ளதாக திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் அமைப்பாளர் பேரா.சுப.வீரபாண்டியன் தெரிவித்துள்ளார்.

சென்னையிலுள்ள இலங்கைத் துணைத்தூதுவர் ஹம்சா தமிழ் நாட்டில் எத்தனை குழப்பங்களை செய்ய முடியுமோ அத்தனை குழப்பங்களையும் முறையற்ற வழிகளிலே செய்து கொண்டிருக்கிறார் என அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

துணைத்தூதுவர் ஹம்சாவுக்கு எதிராகவே ஒரு மிகப் பெரிய ஆர்ப்பாட்டத்தை மிக விரைவில் நடத்த தமிழகத்திலுள்ள அனைத்து அமைப்புக்களும் முடிபெடுத்திருக்கின்றோம். இதற்கான முயற்சிகளையும் நாங்கள் இப்பொழுது மேற்கொண்டிருக்கிறோம் என்றார் சுப.வீரபாண்டியன். (ச-5)

# பாக். கிரிக்கெற் வீரர் அக்தருக்கு 5 ஆண்டுகள் விளையாடத் தடை

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர் சோயப் அக்தருக்கு 5ஆண்டுகள் விளையாட பாகிஸ்தான் கிரிக்கெட் சபை தடை விதித்துள்ளது.

கடந்த 2006ஆம் ஆண்டு சக நாட்டு வீரரான முகமது ஆசிப்பை துடுப்பு மட்டையால் அடித்தது,வன்முறை மற்றும் உடற் தகுதியின்மை போன்ற காரணங்களினால் கடந்த 2 ஆண்டுகளாக அக்தர் விளையாடாமல் இருந்தார்.

இதனிடையே இந்தியாவில் நடைபெறவிருக்கும் ஐ.பி.எல் கிரிக்கெட் போட்டியில் விளையாட அக்தர் தேர்ந்தெடுக்கப்பட்டார். அக்தர் மீதுள்ள குற்றங்களுக்கு பாகிஸ்தான் கிரிக்கெட் சபை விசாரணை நடத்தி வந்தது.



இதனிடையே அவருக்கு 5ஆண்டுகள் விளையாடத் தடை விதிப்பதாக பாகிஸ்தான் கிரிக்கெட் சபைத் தலைவர் நாசிம் அஸ்ரப் தெரிவித்துள்ளார்.

இதன்படி இவர் 5 ஆண்டுகளுக்கு பாகிஸ்தான் அணியில் விளையாட தடை விதிக்கப்பட்டுள்ளது. ஆனால் அவர் இந்தியாவில் நடைபெறவிருக்கும் ஐ.பி.எல் கிரிக்கெட் போட்டியில் விளையாட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (ச-5)


## பதவி வெற்றிடங்கள் - 2008

பின்வரும் பதவிகளுக்கு மேலதிகமாக ஆட்களைச் சேர்க்கும் வகையில் பதவி வெற்றிடங்கள் நிரப்பப்படவுள்ளன. விண்ணப்பிப்போர்;

- 20-45 வயதிற்குட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.
- யாழ்.நக்ர மையத்திலிருந்து 7 கிலோமீற்றர் தூரத்திற்குள் வசிப்பவர்களாக இருத்தல் கட்டாயமானதாகும்.

○ தமிழில் ரைப்பிங் செய்து கணனி பக்க அமைப்பாளர்கள்.
(ஆண்கள், பெண்கள்)
(நேர்முகத் தேர்வு 03.04.2008 பிற்பகல் 2.30 மணி)
○ ஒப்புநோக்குநர்கள்
(இருபாலாரும், ஆண்கள் இரவுக் கடமை)
○ அலுவலகச் செய்தியாளர்
(ஆண்கள்)
(நேர்முகத் தேர்வு 03.04.2008 பிற்பகல் 2.30 மணி)
○ பிரதேச செய்தியாளர்கள்
வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம், தீவகம்
(நேர்முகத் தேர்வு 04.04.2008 பிற்பகல் 2.30 மணி)
○ ஓவ்செற் இயந்திர இயக்குநர்கள், பயிலுநர்கள்
(ஆண்கள்)
(நேர்முகத் தேர்வு 05.04.2008 பிற்பகல் 2.30 மணி)
○ பாதுகாப்பு உத்தியோகத்தர்கள்
○ சிற்றூழியர்கள்
(நேர்முகத் தேர்வு 06.04.2008 பிற்பகல் 2.30 மணி)
தகுதியுடையவர்கள் குறித்த திகதிகளில் நேரில் வரவும்.

இல.3,2 ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

நிர்வாக உத்தியோகத்தர்
வலம்புரி

## இன்று ஒரு தகவல்

# உணவின் மகிமை

மகாபாரத யுத்தம் முடிந்து தர்மர் சக்கரவர்த்தியானார். பீஷ்மர் யுத்தபூமியிலே அம்புப் படுக்கையிலே படுத்துக் கொண்டிருக்கிறார். உயிரை விடுவதற்கு சூரியன் வடதி சையை அடையும் உத்தராயண புண்ணிய காலத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார். அந்த நேரத்திலே தர்மர், கண்ணனிடம் அனுமதிவாங்கிக் கொண்டு பீஷ்மரைப் பார்ப்பதற்காக குரு சேஷ்த்திரத்துக்கு வருகிறார். அவருடன் தம்பிமார்கள், திரௌபதி எல்லோரும் வரு கிறார்கள்.

யுதிஷ்டிரர் பீஷ்மரிடம் வர்ணம், ஆசிரமம், மக்கள் கடமை, அரசரின் கடமை குறித்துப் பல கேள்விகளைக் கேட்கிறார். அவை ஒவ்வொன்றுக்கும் பீஷ்மர் பதில் சொல்லிக்கொண்டிருக்கிறார். இவ்விதம் பீஷ்மர் யுதிஷ்டிரருக்கு தர்மோபதேசம் செய்துகொண்டிருப்பதைப் பார்த்த திரௌபதிக்கு அடக்க முடியாத சிரிப்பு வந்து விட்டதாம். அவ ரது சிரிப்புச் சப்தத்தைக் கேட்ட பீஷ்மர் தனது தர்மோபதேசத்தை பாதி யிலே நிறுத்திவிட்டு திரௌபதியைப் பார்த்து ``மகளே! ஏன் சித்தாய்?'' என்று கேட்டார் "என்னை மன் னித்துவிடுங்கள் பிதா மகரே! ஏதோ தெரியாத்தனமாகச் சிரித்துவிட்டேன்'' என்றாள் திரௌபதி. ``குழந்தாய்! உன் னைப் போன்ற உத்தம ஸ்திரிகள் பலர் முன்னிலையில் காரணமில்லாமல் சிரிக்க மாட்டார்கள். வெட்கப்படாமல் விஷயத்தை சொல்'' என்றார் அவர்.

திரௌபதிக்கு கண்கலங்க ஆரம்பித்தது. ``சுவாமி! நீங்கள் இவ்வளவு தர்மோபதேசம் செய்து கொண்டிருப் பதை பார்த்த போது எனக்கு ஒரு சந்தேகம் ஏற்பட்டது. தர் மத்துக்கு இவ்வளவு தூரம் விளக்கம் கொடுக்கிற பிதா மகர், அன்று கௌரவர் சபையிலே துச்சாதனன் என்னை மானபங்கப்படுத்த முயற்சி செய்தபோது கண்மூடி மௌனி யாகத்தானே இருந்தார். அந்த நேரத்தில் அவரது இவ் வளவு ஞானமும் எங்கே போனது? ஒருவேளை இவற்றை யெல்லாம் பின்னர்தான் கற்றுக்கொண்டாரா என நினைத்தேன்; சிரிப்பு வந்தது'' என்றாள்.

பிதாமகர் அதற்கு அமைதியாகப் பதில்சொல்ல ஆரம்பித்தார். "குழந்தாய்! நீ நினைத்தது சரிதான். துரியோ தனன் சபையிலே நான் இருந்த போதும் இந்த ஞானம் இருக் கத்தான் செய்தது. ஆனால் துஷ்டனான துரியோதனனின் உணவை நான் அப்பொழுது சாப்பிட்டு வந்தேன். அதன் காரணமாக எனது அறிவு மழுங்கிவிட்டது. நல்லது கெட்டது பற்றிச் சிந்திக்க முடியாமல் போய் விட்டது. தீயவர்கள் போடுகிற உணவைச் சாப்பிட்டால், சாப்பிடுகிறவனின் மன மும் உடம்பும் கெட்டுப் போய்விடும்'' என்று தர்ம சாஸ்திரங்கள் சொல்கின்றன. கெட்டவன் இட்ட உணவைச் சாப்பிட்ட தனால் உண்டான கெட்ட இரத் தம் முழுவதும் அர்ஜுனன் என்மீதுவிட்ட பாணங்களால் ஏற்பட்ட காயங்களினால் வெளி யேறிவிட்டது. கெட்ட இரத்தம் முழுவதும் வெளியேறி விட்டதால் இப்பொழுது என் புத்தி தெளிவடைந்துவிட்டது. அதனாலே தான் இப்பொழுது தர்மத்தின் தத்துவங்களை தெளிவாக எடுத்துச் சொல்ல முடி கிறது என்றார் பீஷ்மர்.

இதிலிருந்து நாம் தெரிந்துகொள்ள வேண்டியது என்ன தெரியுமா? யார் சாப்பிடக்கூப்பிட்டாலும் முண்டிய டித்துக் கொண்டு போய் பந்தியிலே முதலில் உட்காரக் கூடாது. சாப்பிடக்கூப்பிடுகிறவர்கள் எப்படிப்பட்டவர்கள்? நல்லவர்களா என்பதைப் பற்றி முதலில் யோசிக்க வேண் டும். கெட்ட எண்ணத்துடன் போடும் சாப்பாடு புத்தியை மழுங் கடித்து விடும். எத்தனையோ பேர், பெரிய உத்தியோகத்தில் இருப்பவரைக் கூப்பிட்டு சாப்பாடு முடிந்த கையோடு முக்கிய மான பத்திரங்களில் எல்லாம் கையெழுத்தை வாங்கிவிடு வார்கள். முக்கியமாக பெரிய பொறுப்பிலே இருப்பவர்கள் யாராவது சாப்பிடக் கூப்பிட்டால் யோசிக்கவேண்டும். கூப்பிடுகிறவர்கள் மனதைப் புரிந்து கொண்டு போகலாமா வேண்டாமா என்பதை முடிவு செய்ய வேண்டும். சாப்பாட் டிலே அவ்வளவு விஷயம் இருக்கிறது. பீஷ்மருக்கே இந்த நிலை என்றால் நாமெல்லாம் எம் மாத்திரம்?

சில சமயங்களில் ``சாப்பாடு'' புத்தியிலே ஒரு தெளிவை உண்டாக்குவதும் உண்டு. ஓர் ஊருக்கு ஒரு பெரிய மகான் வந்தார். அவர் சாப்பிடுவதே இல்லை. எப்போதாவது சிறிது தண்ணீர், பால் சாப்பிடுவார். அவ்வளவு தான்! ருசியை எல்லாம் கடந்தவர். அவரை எல்லோரும் சென்று தரிசித்து ஆசீர்வாதம் வாங்கினார்கள்.

அந்த ஊரிலேயிருந்த ஒரு ஹோட்டல் முதலாளியும் அவரிடம் ஆசீர்வாதம் வாங்கப் போனார். அவர் முன் சென்று அவரது காலிலே விழப்போனார். அதற்கு முன் அந்த மகான் எழுந்து இவர் காலிலே விழுந்துவிட்டார். முதலாளி பதறிப் போய்விட்டார். "சுவாமி... இது அபச்சாரம்! நீங்கள் என் காலில் விழுவதா? நீங்கள்தான் என்னை ஆசீர்வாதம் செய்ய வேண்டும்...'' என்றார்.

அதற்கு மகான் சொன்னார் ``அப்படி அல்ல! நீங்கள் தான் என்னை ஆசீர்வாதம் செய்யவேண்டும். சில காலத்துக்கு முன்னால் உங்கள் ஹேட்டலிலே நான் கணக்கு வைத்து சாப்பிட்டுக்கொண்டிருந்தேன்... இன்றைக்கு நான் ருசிகளை யெல்லாம் வெறுத்து ஞானியாவதற்குக் காரணமே நீங்கள் தான்...'' என்றார்.

தென்கச்சி கோ சுவாமிநாதன்

# நூலக விழிப்புணர்வு நிறுவகத்தினால் நடாத்தப்பெற்ற கட்டுரை, பேச்சு, பொது அறிவுப் போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

நூலக விழிப்புணர்வு நிறுவகத்தினால் வாசிப்பு மாதத்தை முன்னிட்டு 2007 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் நடாத்தப்பட்ட போட்டிகளில் (கட்டுரை, பேச்சு, பொது அறிவு) பங்குபற்றி முதல் மூன்று இடங்களையும்பெற்றுக்கொண்ட மாணவ, மாணவிகளின் பெயர் விபரங்கள் நேற்று வெளியாகியதின் தொடர்ச்சி கீழ்வருமாறு.

இவர்களுக்கான பரிசளிப்புவிழா. ஏப்ரல் மாத முற் பகுதியில் நடைபெறும் என பாடசாலை மட்டப் போட்டிகள் தொடர்பான இணைப்பாளர் மு.சின்னராசா அறி வித்துள்ளார்.

**வலிகாமம் வலயம்**

**தெல்லிப்பழைக் கோட்டம்**

**கட்டுரைப் போட்டி கீழ்ப்பிரிவு**

கபீர்க்கனா கமலச்சந்திரன்- யூனியன் கல்லூரி, கிருஷ்ண மூர்த்தி சுகன்யா-மல்லாகம் ம.வி., துரைசிங்கம் கயூரன் - மகாஜனாக் கல்லூரி.

**மேற்பிரிவு**

சிவகௌரிநாயகி கனகசூரியர்- யூனியன் கல்லூரி, குகப்பிரியாசெல்வராசா - மகா ஜனாக் கல்லூரி, மனோகரன் கிரிசாந்தி - மல்லாகம் ம.வி.

**பேச்சுப்போட்டி கீழ்ப்பிரிவு**

ரோபிதா சிவபாதம் - மகா ஜனாக் கல்லூரி.

**மேற்பிரிவு**

சிவராசாரம்யா - வயாவிளான் ம.வி.

**பொது அறிவுப் போட்டி**

மதியாபரணன் அஜந்தன் - மகா ஜனாக்கல்லூரி, கதிர்காம நாதன் பிரகாஷ்-யூனியன்கல்லூரி, சுகுமார்டிலஸ்ரினா-மயிலிட்டிவடக்கு கலைமகள் வி.

**உடுவில் கோட்டம்**

**கட்டுரைப்போட்டி கீழ்ப்பிரிவு**

அஜந்தினி வேலாயுதம் - இணுவில் மத்திய கல்லூரி, பாரதி ஜெக நாதன் - மயிலணி சைவ மகாவித் தியாலயம், கமலநாதன் நிரோஜன்-தாவடி இந்து தமிழ்க்கலவன் பாடசாலை.

**மேற்பிரிவு**

நேதிகா அருளானந்தம் - இணு வில் மத்திய கல்லூரி, த்மிழினி சற்குணசிங்கம் - இராமநாதன் கல்லூரி, லக்சனா பாலசுந்தரம் - இணுவில் இந்துக் கல்லூரி.

**பேச்சுப் போட்டி கீழ்ப்பிரிவு**

கனகசபாபதி வசீகரன் - இணு வில் மத்திய கல்லூரி, ச.சக்தி பாலன்- ஸ்கந்தவரோதயாக் கல்லூரி, லக்சிகா மகேந்திரன் - தாவடி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை.

**மேற்பிரிவு**

சங்கவைசிவானந்தம்-இராமநாதன் கல்லூரி, வி.இமாஜினி-ஸ்கந்தவரோதயாக் கல்லூரி, லாவண்யா அருமைத்துரை - இணுவில் இந்துக் கல்லூரி.

**பொது அறிவுப்போட்டி**

சாம்பவி ரமணன் - இராம நாதன் கல்லூரி, சிறிஸ்கந்தராஜா சாமினோஜ் - தாவடி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை, அருள்ராஜ் டயானா - ஏழாலை சைவமகாஜனா வித்தியாசாலை.

**சங்கானைக் கோட்டம்**

**கட்டுரைப்போட்டி கீழ்ப்பிரிவு**

சுப்பிரமணியம் அபிராமி - அராலி இந்துக்கல்லூரி, சோபிகா செல்வச் சந்திரன் - வட்டு மத்தியகல்லூரி, மயூரா மகாராஜன் - வட்டு மத்திய கல்லூரி.

**மேற்பிரிவு**

கந்தசாமி ஜோசிதா - சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயம், இராம கிருஷ்ணன் ஷயனுதா வட்டு இந்து நவோதயக் கல்லூரி, வரதீஸ்வரன் கிருஷா - பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயம்.

**பேச்சுப்போட்டி கீழ்ப்பிரிவு**

மைதிலி மோகனராசன் - வட்டு மத்தியகல்லூரி, நா.தனுஷா - மூளாய் சைவப்பிர காச வித்தியாசாலை, எதிர் மன்னசிங்கம் தனுசியா - அராலி இந்துக்கல்லூரி.

**மேற்பிரிவு**

வைரமுத்து அபிராமி - பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தி யாலயம், செல்வராசா ஸ்ரீரஜிதன் - சங்கானை சிவப்பிரகாச மகாவித்தி யாலயம், பரம சிவம் தவப்பிரியன் - வட்டு இந்து நவோதயக் கல்லூரி.

**பொது அறிவு**

வினோஜா கெங்காதரன் -வட்டு மத்தியகல்லூரி, திருமூர்த்தி சேந் தன்- பண்ணாகம் மெய்கண்டான் ம.வி., கோவிந்தராஜன் கோகுலக் கண்ணன் - வட்டு இந்து நவோதயக் கல்லூரி.

**சண்டிலிப்பாய்க் கோட்டம்**

**கட்டுரைப்போட்டி கீழ்ப்பிரிவு**

திவியா தில்லைவாசன் - மானிப்பாய் மகளிர் கல்லூரி, கொன்சலா அருமைநாயகம் - இளவாலை கன்னியர் மடம் ம.வி., சுரேக்கா சிவதாசன்-ஆனைக்கோட்டை பால சுப்பிர மணியவித்தி.

**மேற்பிரிவு**

வேதிகா ஜெயராசா - மானிப் பாய் மகளிர்கல்லூரி, சித்திரா கந்த ராசா- மானிப்பாய் மகளிர் கல்லூரி, சிந்துஜா கருணானந்தன் - மானிப் பாய் மெமோரியல் ஆங்கிலப் பாட சாலை.

**பேச்சுப் போட்டி கீழ்ப்பிரிவு**

கோபிகா சேனாதிராசா - மானிப் பாய் மெமோரியல் ஆங்கிலப் பாடசாலை, ஸ்டாளினி இராசேந்திரம் - பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரி, தங்கராசா ருஷாந்தா - பிரான்பற்று கலைமகள் வித்தியாலயம்.

**மேற்பிரிவு**

ஜீவானந்தன் கணேசலிங்கம்-மானிப் பாய்மெமோரியல் ஆங்கிலப்பாடசாலை,. தெய்வேந்திரம் சிவரூபன்- சண்டிலிப் பாய் இந்துக்கல்லூரி, யசோதா குணேஸ்வரன் -மானிப் பாய் மகளிர் கல்லூரி.

**பொது அறிவுப் போட்டி**

சிறிக்குமரன் கவிப்பிரியன்- மானிப்பாய் இந்துக்கல்லூரி, நிம லினி மங்களேஸ்வரநாயகம்- இள வாலை கன்னியர்மடம்ம.வி., கணேசன் சுஜிதரன் - சண்டிலிப்பாய் இந் துக்கல்லூரி.

**வடமராட்சி வலயம்**

**கரவெட்டிக் கோட்டம்**

**கட்டுரைப்போட்டி கீழ்ப்பிரிவு**

சோபனா ரவிச்சந்திரன்-உடுப்பிட்டி மகளிர்கல்லூரி, ஆ.நிதர்சன்-விக்னேஸ்வராக் கல்லூரி, ஜெயராணி சிவபாத சுந்தரம்-வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி.

**மேற்பிரிவு**

துர்க்கா ஜெயரட்ணம்-உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, பு.ஜீவனா-விக்னேஸ்வராக் கல்லூரி, நளினி கிருபாகரன்- உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.

**பேச்சுப்போட்டி கீழ்ப்பிரிவு**

சண்முகப்பிரியா பாலசிங்கம்-உடுப் பிட்டி மகளிர் கல்லூரி, மு.ஜமீலா- விக்னேஸ்வராக் கல்லூரி, துளசி சிவராசா- உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.

**மேற்பிரிவு**

சி.கசிதா-விக்னேஸ்வராக் கல்லூரி.

**பருத்தித்துறைக் கோட்டம்**

**கட்டுரைப்போட்டி கீழ்ப்பிரிவு**

தெய்வேந்திரராஜா பிரணவன்- ஹாட்லிக் கல்லூரி, சண்முகராஜா தீபிகா-புற்றளை மகாவித்தியாலயம், கஜனி கிருபாகரன்-மெதடிஸ்ற் பெண்கள் உயர்தர பாடசாலை.

**மேற்பிரிவு**

கமலநாதன் சுதர்சன்-ஹாட்லிக் கல்லூ்ரி, விஜிந்தினி மனோகரராஜா- மெதடிஸ்ற் பெண்கள் உயர்தரப் பாடசாலை, இராசேந்திரம் கிருஷ்ணப் பிரியா-புற்றளை மகாவித்தியாலயம்.

**பேச்சுப்போட்டி கீழ்ப்பிரிவு**

கனகசிங்கம் சிவசுதன்- ஹாட் லிக் கல்லூரி, மதுரா பாலசுப்பிர மணியம்- மெதடிஸ்ற் பெண்கள் உயர்தரப் பாடசாலை, தனுசியா இந்திரதாஸ்- வல்லை சிவகுரு வித்தி.

**மேற்பிரிவு**

ஜனனி தேவராஜா- மெதடிஸ்ற் பெண்கள் உயர்தரப் பாடசாலை, சிவ குமார் நிரோசன்-ஹாட்லிக் கல்லூரி, வாமதேவன் நிலாநியா-வல்வை மக ளிர் வித்தி.

**தென்மராட்சி வலயம்**

**கட்டுரைப் போட்டி கீழ்ப்பிரிவு**

சிவசுப்பிரமணியம் தீபிகா-கைதடி நாவற்குளி அ.த.க.பாடசாலை, சிறீமுருகதாஸ் விசாகன்-சாவகச்சேரி இந்துக் கல்லூரி, வ. சசிகலா-டிறிபேக் கல்லூரி

**மேற்பிரிவு**

சர்மிளா ஜெயக்குமார்-சாவகச் மகளிர் கல்லூரி, வேலாயுத பிள்ளை இமயவல்லி-சாவகச்சேரி இந்துக் கல் லூரி, ரம்யா ராஜமோகன் - சந்திரபு ஸ்கந்தவரோதய மகாவித்தி.

**பேச்சுப்போட்டி கீழ்ப்பிரிவு**

சிவஞானம் பவித்திரா-மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம், அம்பிகாநிதி கோகுலன்- வரணி மகா வித்தியாலயம், தங்கவடிவேல் வரா கினி - கொடிகாமம் அரசினர் வித்தி.

**மேற்பிரிவு**

சின்னத்துரை கோபிதன்-சாவ கச்சேரி இந்துக் கல்லூரி, சர்மிளா ஜெயக்குமார்-சாவகச்சேரி மகளிர் கல்லூரி, விமலரர்சா தாட்சாயினி-கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தி.

**பொது அறிவுப் போட்டி**

அன்னலிங்கம் கீர்த்திகா-மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம், ரவீந்திரராஜா ராஜபிரவிந்தன்-சாவகச் சேரி இந்துக்கல்லூரி, வசந்தன் காவேரி- கச்சாய் அ.த.க.பாடசாலை.

## இராசிபலன்

02.04.2008
(பங்குனி 20, புதன்கிழமை)
ஏகாதசி பிற்பகல் 2.43 மணிவரை
அவிட்டம் பின்னிரவு12.53 மணி வரை
இராகுகாலம் 12.10-01.40 மணிவரை
சுபநேரம்-04.40-06.10 மணிவரை
ஏகாதசி விரதம்
நீர்வேலி கந்தசுவாமி கொடி

| | |
|---|---|
| மேடம் | போசனசுகம், காரிய அனுகூலம், பொருள் சேர்க்கை. |
| இடபம் | அதிகாரம், முயற்சி கைகூடும், நண்பர்கள் உதவி, உற்சாகம். |
| மிதுனம் | பிதாசிந்தை, கட்டுப்பாடு, புதிய தகவல், அதிகசெலவு. |
| கடகம் | அபகீர்த்தி, காரிய தடங்கல், பிரயாணம், உடல்நலக்குறைவு. |
| சிங்கம் | அபூர்வசந்திப்பு, முயற்சி தாம தம், பணவருவாய், மனமகிழ்ச்சி. |
| கன்னி | தேகநலன், காரிய அனுகூலம், பணவருவாய், மனமகிழ்ச்சி. |
| துலாம் | புத்திரரால் கவலை, காரிய தாமதம், ஆரோக்கியக்குறைவு. |
| விருச்சிகம் | சுபசெலவு, தேகநலன், பிரயாண சுகம், வேலைச்சுமை. |
| தனுசு | சகோதரர் · உதவி, முயற்சி கைகூடும், நல்ல செய்தி. |
| மகரம் | மனக்கிலேசம், முயற்சி தாமதம், அபகீர்த்தி, ஆரோக்கியக்குறைவு. |
| கும்பம் | புதிய முயற்சி, போசனநன்மை, நண்பர்கள் சந்திப்பு. தெய்வசிந்தை. |
| மீனம் | காரிய அலைச்சல், சுபசெலவு, பிரயாணக்கஷ்டம்,ஆரோக்கியக் குறைவு. |

வ ள வ ன்

## அகதிகளை ஏற்றிவந்த 2 படகோட்டிகள் கைது

இலங்கை அகதிகளை ஏற்றி வந்த 2 படகோட்டிகளை ராமேஸ்வரம் பொலிஸார் திங்கட்கிழமை கைதுசெய்தனர். இலங்கை மன்னார் பகுதியிலிருந்து 2 பெண்கள், ஓர் ஆண் குழந்தை, ஒரு பெண் குழந்தை உள்ளிட்ட 4 பேர் பேசாலை கடற்கரையில் இருந்து புறப்பட்டு தனுஷ்கோடி அரிச்சல்முனை கடற்கரைப் பகுதிக்கு வந்து சேர்ந்தனர்.

இவர்களை ஏற்றி வந்த படகோட்டிகள் இலங்கைக்குதிரும்பிச்சென்று கொண்டிருந் தனர். இந்தியக் கடற்படைக்குச் சொந்த மான ஹெலிகாப்டர்மூலம் கடற்படை ரோந் துப்பிரிவினருக்கு இந்ததகவல்தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்து படகோட்டிகளும் அவர்களது படகுகளும் பறிமுதல் செய்யப்பட்டது. விசாரணையில் அவர்கள் மன்னாரைச் சேர்ந்த அன்ரன் (வயது 39), வவண்டீன் (வயது-29) என்பது தெரியவந்தது. (அ-5)

## யாழ்.சுகாதார திணைக்கள கண்காணிப்புக்குழு கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.சுகாதார திணைக்களத்தின் கீழ் இயங்கும் வைத்திய நிறுவனங்களுக்கும் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கும் மாவட்ட கண்காணிப்புக் குழுக் கூட்டம் 4ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.

இக் கூட்டத்திற்கு நிறுவனத்தலைவர்களையும் அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகளையும் தவறாது சமூகமளிக்குமாறு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் கேட்டுக் கொண்டுள்ளார். (ஓ)

## வருடாந்த குருபூசை

(யாழ்ப்பாணம்)

யாழ்.கந்தர்மடம் குமாரசாமி வீதியில் அமைந்துள்ள வேதாந்த மடத்தில் அதன் ஆரம்ப குருவான சாஜன் சுவாமிகளின் வருடாந்த குருபூஜை நாளை வியாழக்கிழமை காலை 10 மணிக்கு தேவார இசைமணி தாவடியூர் இ.திருஞானசம்பந்தரின் பண்ணிசையுடன் ஆரம்பமாகும்.

நிகழ்வில் மடத்தில் அமைந்துள்ள சிவப்பேறடைந்த சுவாமிகளின் சமாதிகள் மற்றும் நினைவாலயங்களில் விஷேஷ அபிஷேக ஆராதனைகள் இடம்பெற்று அடியார்களுக்கு அன்னதானமும் வழங்கப்பெறும். (ஓ)

## வருடாந்த பொங்கல் விழா

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான வருடாந்த பொங்கல் விழா எதிர்வரும் 8ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 6 மணிமுதல் மாலை 6.30 மணி வரை நடைபெறவுள்ளது.

நிகழ்வில் காலை 6 மணிக்கு ஸ்நபன அபிஷேகம், வழுந்துப்பானை வைத்தலும் 7 மணிக்கு காலைப் பூஜை, கூட்டுவழிபாடும். மு.ப.10 மணிக்கு ஸ்நபன அபிஷேகம், கூட்டு வழிபாடும், மு.ப.11 மணிக்கு உச்சிக்காலப் பூஜையும் மு.ப.11.30 மணிக்கு வசந்த மண்டபப் பூஜையும் உள்வீதி உலாவும், பி.ப.4 மணிக்கு சாயரட்சைப் பூஜையும் 4.30 மணிக்கு வசந்த மண்டபப் பூஜையும் அம்பாள் வெளிவீதி உலாவும், 6.30 மணிக்கு அர்த்த சாமப்பூஜையும் இடம்பெறவுள்ளது. (ஓ)


## முன்பள்ளிகளுக்கான முதலுதவிப் பெட்டிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்திலுள்ள 616 முன்பள்ளிகளுக்கு போறூட் (FORUT) நிறுவனம் முதலுதவிப் பெட்டிகளையும், அதற்குரிய மருந்துப் பொருட்களையும் அன்பளிப்பாக சுகாதர திணைக்களத்தினூடாக வழங்கியுள்ளது.

இவை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைகளூடாக முன்பள்ளிகளுக்கு வழங்கப் பட்டு வருகின்றன என பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

ஒவ்வொரு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலும் சகல முன்பள்ளி ஆசிரியர்களுக்கும் அடிப்படை முதலுதவி, பிள்ளைகளின் பற் சுகாதாரம், தனிநபர் சுகாதாரம், சுகாதார பழக்கவழங்கங்கள் சம்பந்தமாக பயிற்சி வழங்கப்பட்டு வருகின்றது. இப்பயிற்சி நெறிக்கும் (FORUT) நிறுவனம் நிதியுதவி வழங்கியுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ)



வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கம் நடாத்திய அதிஷ்டலாபச் சீட்டிழுப்பில் ஆறுதல் பரிசுபெற்ற அதிஷ்டசாலிகளுக்கு சமாதான நீதிவான் திரு. த.சிவலிங்கம் வட்டு இந்து வாலிபர்சங்க முன்னாள் பொருளாளரும் இலங்கை போக்குவரத்துச்சபை வடமாகாண ஆளணி முகாமையாளர் க.கேதீசன் ஆகியோர் பரிசில்களை வழங்குகின்றனர்.

## வடமராட்சி கல்வி வலயத்தில் முன்பள்ளிகளின் நிலைப்பாடு

(அல்வாய்)

வடமராட்சி கல்வி வலயத்தில் 72 முன் பள்ளிகளும் 7 கொத்தணிகளாக நிர்வகிக்கப்பட்டு வருகின்றன. இவற்றில் 136 ஆசிரியர்கள் சேவையாற்றி வருகிறார்கள். 1500 சிறுவர்கள் கல்வி பயின்று வருகிறார்கள். இவ்வாறு பருத்தித்துறைப் பிரதேச செயலகத்தில் பிரதேச செயலர் இ.வரதீஸ்வரன் தலைமையில் நடைபெற்ற சிறுவர் கண்காணிப்புக் குழுக் கூட்டத்தில் தெரிவிக்கப் பட்டது. அக் கூட்டத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது,

பேரூட் நிறுவனத்தின் அனுசரணையுடன் உள்ளூராட்சித் திணைக்களத்தினூடாக 2007ஆம் ஆண்டில் 6மாத கால சத்துணவு வழங்கல் திட்டத்தினூடாக 2 மாதங்களுக்கு மட்டும் முன்பள்ளி சிறாருக்கு சத்துணவு மூலப் பொருட்கள் வழங்கப்பட்டது. அப்பொருட்களையே இன்றுவரை சத்துணவாக வழங்கி வரப்படுகிறது.

வருமானம் எதுவும் கிடைக்காத நிலையில் சேவையாற்றிய 8 முன்பள்ளி ஆசிரியர்களுக்கு விசேட ஏற்பாட்டின்படி சிறுவர் பாது காப்பு நிதியத்தினால் ஆயிரத்து 500 ரூபா வீதம் மாதாந்த ஊக்குவிப்புப் படி வழங் கப்படுகிறது.

மேலும் 2008 ஜனவரி, பெப்ரவரி மாதங்களில் (IUM) ஐ.யூ.எம்.நிறுவனத்தின் அனுசரணையுடன் கல்வித்திணைக்களத்தினூடாக பயன்தரு மரக்கன்றுகள் முன்பள்ளிகளுக்கு விநியோகிக்கப்பட்டது.

சிறுவர் பாதுகாப்பு நிதியுதவியுடன் 6 முன்பள்ளிகள் தற்போது புனர் நிர்மானம் செய்யப்படுகிறது. அவை ஏப்ரல் மாத முற்பகுதியில் பூர்த்தி செய்யப்பட்டு உரியவர்களிடம் கையளிக்கப்படவுள்ளது.

எதிர்கால செயற்பாடுகளாக கண்காட்சி நிகழ்வு, ஆசிரியர் தின விழா, மொழித்திறன் நிகழ்வு போன்றன செய்யப்படவுள்ளதாக அவற்றுக்கான நிதியுதவி தேவைப்படுவதுடன் 22 முன்பள்ளிகளுக்கு தளபாடங்கள் தேவைப் படுவதாகவும், முன்பள்ளிகளுக்கு கட்டட வசதி தேவைப்படுவதாகவும் அறிவிக்கப்பட்டது.(ஓ-19)

## அவசர கலந்துரையாடல்

கலைப்பீட அனைத்து வருட மாணவர்களுக்கும், நுண்கலைத்துறையின் அனைத்துத்துறை மாணவர்களுக்குமான அவசர கலந்துரையாடல் இன்று புதன்கிழமை காலை 10 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

இதில் மாணவர் நலன் தொடர்பான முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்படவுள்ளதால் அனைத்து மாணவர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றியத் தலைவர் கேட்டுக் கொண்டுள்ளார். (ஓ)

## யாழ்.செய்திகள்

## விளையாட்டு விழா முடிவுகள்

(கரவெட்டி)

கரவெட்டி பிரதேச செயலகத்திற்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங் களிற்கிடையிலான 2008ஆம் ஆண் டுக்கான விளையாட்டுப் போட்டிகளில் முதல் இரு இடங் களைப்பெற்ற விளையாட்டுக் கழகங்களின் பெயர் விபரம் வருமாறு,

எல்லே-ஆண்கள்:- மனோகரா, டைமன்ஸ்.

எல்லே-பெண்கள்:- மனோகரா, டைமன்ஸ்

கிரிக்கெற்-ஆண்கள்:- பொம்பேஸ், கலைமகள்.

கிரிக்கெற்-பெண்கள்:- மனோகரா, டைமன்ஸ்.

கரப்பந்தாட்டம்-ஆண்கள்:- சிவகுமாரன், டைமன்ஸ்.

கரப்பந்தாட்டம்-பெண்கள்:- சிவகுமாரன், டைமன்ஸ்.

உதைபந்தாட்டம்-ஆண்கள்:- மனோகரா, பொம்பேஸ்

உதைபந்தாட்டம்-பெண்கள்:- பொம்பேஸ், யங்கம்பன்ஸ்.

கபடி-ஆண்கள்:- பொம்பேஸ், கலைமதி.

கபடி-பெண்கள்:- பொம்பேஸ், யங்கம்பன்ஸ்.

தடகளப்போட்டி-ஆண்கள்:- இமையாணன், நவஜீவன்ஸ்.

தடகளப்போட்டி-பெண்கள்:- இமையாணன், மைக்கல்.

வலைப்பந்தாட்டம்-பெண்கள்:- பொம்பேஸ், மனோகரா.

பூப்பந்தாட்டம்-ஆண்கள்:- டைமன்ஸ், மனோகரா.

பூப்பந்தாட்டம்-பெண்கள்:- பொம்பேஸ், மைக்கல்.

மேசைப்பந்தாட்டம்-ஆண்:- நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்.

அனைத்துப் போட்டிகளிலும் 71 புள்ளி கள் பெற்று பொம்பேஸ் விளையாட்டுக் கழகம் முதலிடத்தையும் 47 புள்ளிகள் பெற்று மனோகரா விளையாட்டுக் கழகம் இரண்டாம் இடத்தையும் பெற்றுக்கொண்டன.

## கர்ப்பிணித் தாய்மாருக்கான போஷாக்கு மேம்பாட்டுத் திட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் கணிசமான அளவு கர்ப்பவதிகளின் உடற்திணிவுச் சுட்டி எதிர்பார்க்கப்படும் அளவைவிட குறைவாக இருப்பது அவதானிக்கப்பட்டுள்ளது. இதனால் பிறக்கும் குழந்தைகளின் பிறப்பு நிறையும் குறைவடைய வாய்ப்புள்ளது.

இதனை கருத்திற்கொண்டு யாழ்.மாவட்டத் திலுள்ள கர்ப்பவதிகளின் போஷாக்கை மேம்படுத்த அமெரிக்காவை தளமாகக் கொண்டு இயங்கும் சர்வதேச மருத் துவ சுகாதார நிறுவனம் (IMHO) முன்வந்துள்ளதாக பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

இத்திட்டத்தின் கீழ் யாழ்.மாவட்டத்திலுள்ள வசதி குறைந்த போஷாக்கு குறைவான (உடற்திணிவு சுட்டி < 18.5) கர்ப்பவதிகள் 500 பேருக்கு ஏப்ரல் 1 ஆம் திகதி முதல் 6 மாத காலத்திற்கு போஷாக்கு உள்ளீடுகள் இலவசமாக வழங்கப்படும். இதன் பிரகாரம் ஒவ்வொரு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலும் 70 போஷாக்கு குறைவான கர்ப்பவதிகள் இத்திட்டத்தில் பயன்பெறுவர். வழங்கப் பட வுள்ள போஷாக்கு உள்ளீடுகள்

1. போஷாக்கு பால்மா (Enfamama) மாதாந்தம் ஒரு ரின்
2. Ovron Cap- மாதம் 30 capsules (தினசரி ஒன்று)
3. Folic Acid - மாதம் 30 tablets (தினசரி ஒன்று)

மேற்படி உள்ளீடுகள் சகல சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைகட்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்றும் இத் திட்டம் உடனடியாக நடைமுறைப்படுத்தப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ)

## மீள் எழுச்சித் திட்ட அறிமுக நிகழ்வுகள்

ஊர்காவற்றுறைப் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நாளை வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு, யாழ்.மாவட்டத்தில் 2008 ஆம் ஆண்டு உலக வங்கியினது அனுசரணையுடன் ஆரம்பிக்கப்பட்டுள்ள மீள் எழுச்சித் திட்டம் தொடர்பான அறிமுக நிகழ்வு இடம் பெறவுள்ளது. (ஓ)

* * *

வேலணை பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நாளை வியாழக்கிழமை பிற்பகல் 1 மணிக்கு செயலகத்தின் மீள் எழுச்சித்திட்ட அறிமுகவிழா, பிரதேசசெயலர் மு.நந்தகோபன் தலைமையில் நடைபெறவுள்ளது. (ஓ)

## உணவுப் பொருள் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழைப் பிரதேச செயலகத்தின் கீழ் உள்ள J/221, J/222, J/223, J/224, J/227, J/229, J/239, J/244 ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் உள்ள சமுர்த்திப் பயனாளிகளுக்கு கியூடெக் கரித்தாஸ் நிறுவனத்தினால் வழங்கப்படும் உணவுப் பொருட்கள் இன்றும் நாளையும் நாளை மறுநாளும் (புதன், வியாழன், வெள்ளி) தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத்தில் விநியோகிக் கப்படவுள்ளது எனவும் குறித்த சமுர்த்திப் பயனாளிகள், குறிப்பிட்ட தினங்களில் பொருட்களைப் பெற்றுக்கொள்ளுமாறும் வலி. வடக்கு தெல்லிப்பழைப் பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் பா.இராஜகோபாலன் அறிவித்துள்ளார். (ஓ)








கலாபூஷணம் அ.துரைசிங்கம் எழுதிய சுன்னாகத்தின் தமிழ் எழுத்து இலக்கிய முன்னோடிகள் நூல் வெளியீட்டு விழா மைலணி சைவ மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற வேளை பேராசிரியர் ப.புஸ்பரத்தினம் தலைமையுரை நிகழ்த்துவதையும் வெளியீட்டுரையை கோப்பாய் ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர் செல்வி இ.கந்தசாமி ஐயர் நிகழ்த் துவதையும் வலம்புரி பிரதம ஆசிரியர் நயப்புரை நிகழ்த்துவதையும் படங்களில் காணலாம்.

# இலங்கை-இந்திய ஒப்பந்தத்திற்கு அமைய இனப்பிரச்சினைக்கு தீர்வு காண முடியும்

## இந்தியாவில் டியூ.குணசேகர

(கொழும்பு)



இலங்கை இந்திய- ஒப்பந்தத்தை அமுல் படுத்துவதன் மூலம் இலங்கைத் தமிழ் மக்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளார்கள் என்ற உணர்வுக்கு முற்றுப்புள்ளிவைக்க முடியுமென இலங்கையின் அரசியல் விவகாரத்துறை அமைச்சர் டியூ.குணசேகர தெரிவித்துள்ளார்.

சிங்கள மொழியைப் போல தமிழ்மொழியும் சரிக்குச் சமமாகப் பயன்படுத்தப்படுமாயின் தாம் தனிமைப்படுத்தப்படுகின்றோம் என்ற தமிழ் மக்களின் உணர்வை முடிவுக்குக் கொண்டுவர முடியும். இனப்பிரச்சினையென்பது ஒரு அரசியல். எனவே இது அரசியல் ரீதியாகவே தீர்க்கப்படவேண்டும் என டியூ. குணசேகர குறிப்பிட்டார்.

இலங்கை -இந்திய ஒப்பந்தத்துக்கு அமைய உருவாக்கப்பட்ட 13ஆவது திருத்தச் சட்டமானது முழுமையாக அமுல்படுத்தப்படும் பட்சத்தில் சிங்களத்தைப் போன்று தமிழ் மொழியும் சமமாகப் பயன்படுத்தப்படும். அவ்வாறெனின் இனப்பிரச்சினையைத் தீர்ப்ப தற்கு இலகுவாக இருக்கும் என இந்தியா வுக்கு விஜயம் மேற்கொண்டிருக்கும் அமைச்சர் இந்திய ஊடகத்துக்கு வழங்கியிருக்கும் செவ்வியில் கூறினார்.

தமிழ்-சிங்கள இடதுசாரிகளுக்கிடையில் நீண்ட இடைவெளி காணப்படுவதை ஏற்றுக் கொண்ட இலங்கையின் அரசியல் விவகாரத் துறை அமைச்சர் இந்த நிலைமை மேலும் அதிகரித்துச் செல்லலாமென்ற அச்சம் தோன்றியிருப்பதாகத் தெரிவித்துள்ளார்.

விடுதலைப்புலிகள் ஆயுதங்களை கீழே வைத்துவிட்டு அரசியல் தீர்வொன்றுக்கு முன் வர வேண்டும். ஐக்கிய இலங்கைக்குள் தீர் வென்ற நிலைப்பாட்டுக்கு ஆயுதக்குழுக்கள் வருவதற்குத் தயாராக இல்லையென அந்த ஊடகத்துக்கு மேலும் தெரிவித்த அமைச்சர் டியூ.குணசேகர, விடுதலைப்புலிகள் தமது கோரிக்கைகளைக் கைவிடத் தயாரில்லை யென்பதை கடந்த நவம்பர் மாதம் கூட்டணி அரசாங்கம் உணர்ந்து கொண்டதுஎனக் கூறினார். (அ-5

## சரணடையும் விடுதலைப்புலிகளுக்கு வெளிநாடுகளில் வேலைவாய்ப்பு

### கெஹலிய ரம்புக்வெல

(கொழும்பு)

இலங்கை அரசாங்கத்திடம் சரணடையும் விடுதலைப்புலிப் போராளிகளுக்கு வெளிநாடுகளில் வேலைவாய்ப்புப் பெற்றுக்கொடுக்கப் படுமென வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கள் அமைச்சர் கெஹலிய ரம்பக்வெல தெரிவித்துள்ளார்.



இந்த விடயம் தொடர்பாக சர்வதேச குடிய கல்வு நிறு வனத்துடன் பேச்சு வார்த்தை நடத்தியிருப்பதாகஅவர் குறிப்பிட்டார். யாழ் குடா நாட்டிலிருந்து இது வரை 47 விடு தலைப்புலி உறுப்பினர்கள் அரசாங்கத் திடம் சரணடைந்திருப்பதாகவும் அவர்கள் இரண்டு புனர் வாழ்வு நிலையங்களில் தங்கவைக்கப்பட்டிருப்பதாகவும் அசைமச்சர் கூறினார். (அ-5)

## வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

### நில ஆவாரை/நாட்டு நிலாவாரை

Botanical Name :-Cassia senna/
Cassia angustifolia
Family: Caesalpiniaceae
Eng : Indiansenna
Sinh: Nilavari/Senekola



இது செடி (herb ) வகையைச் சேர்ந்தது. யாழ். மாவட்டத்தில் இம் மூலிகைப் பரம்பலானது பொதுவாக இணுவில் கிழக்கு, சண்டிலிப்பாய் மத்தி, நந்தாவில்-கொக்குவில், கைதடி போன்ற இடங்களில் அவதானிக்கப்பட்டது. ஆனால் இந்தியாவில் திரு நெல் வேலி மாவட்டத்தில் அன்னிய செலவானியை ஈட்டித் தருகின்ற மூலிகையாக நிலாவாரை பயிரிடப்பட்டு இவற்றின் இலைகள் வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.

இவை வருடத்திற்கு ஒரு முறை பயிராகி ஓயக் கூடிய, நேராகவும் மிருதுவாகவும் உள்ள ஒரு செடியாகும். இலைகள் குறுகிய, வேலுருவாக (Lanceolate) காணப்படும். இலைக் கொழுந்து 4-8 ஜோடி கூர்மை, மேற்புறம் வழவழப்பு, அடிப் பக்கம் சொரசொரப்பு இலைக் காம்பு இலையை விட நீளம், இதழ்கள் முழு மஞ்சள் நிறம், காய்கள் 1.5 அங்குல நீள முடையவை அநேக விதைகள் உள்ளது. ஐப்பசி, மார்கழி, தை மாதங்களில் பூக்கும்.

பொதுவாக இதன் தரமான விதைகளை பங்குனி, சித்திரை மாதங்களில் சேகரிக்கக் கூடியதாகவுள்ளது. இத் தாவரமானது விதைகள் மூலம் இனவிருத்தி செய்யப்படுகிறது. மேற்படி தரமான விதைகளை 10-12 மணி நேரம் நீரில் ஊறவிட்டு ஊறிய விதைகளை நடுகைக்கு பயன்படுத்தினால் தரமான செடிகள் உருவாகும்.

பயன்படும் பகுதிகள் -உலர்ந்த இலைகள் (dried leaves )

மருத்துவச் செய்கை -மலமிளக்கி (laxative)

வேதியல் பொருட்கள் - (Anthraquinoes sennoides A and B இவ்விலைகளை மருந்திற்கு பயன்படுத்துவதற்கு முன் காம்பு நீக்கி இலையை மாத்திரம் எடுத்து பசுவின் பாலில் பிட்டு அவியல் செய்து வெயிலில் உலர்த்தி எடுத்துக்கொள்ள வேண்டும்.

பொதுவாக யாழ். மாவட்டத்திலுள்ள பரம்பரை வைத்தியர்கள், நாட்டு நிலாவாரைக்கு பதில் காட்டு நிலாவாரை எனும் மூலிகையைப் பயன்படுத்துகிறார்கள். உருவமைப்பில் இரு மூலிகைகளும் வேறு பட்டிருப்பினும் அவற்றில் காணப்படும் வேதியற் பொருட்க ளும் மருத்துவச் செய்கையும் ஒன்றாகவே காணப் படுகிறது.

**காட்டு நிலாவாரை**

(Botanical name :Cassia obovata
Family: Caesalpiniaceae
Eng:Senegal senna
Sinh:Sena-kola

காட்டு நிலாவாரை மூலிகையின் பரம்பலானது நெடுந்தீவு, கைதடி போன்ற இடங்களில் அவதானிக்கக்கூடியதாக இருந்தது. காட்டு நிலாவாரையின் இலைகளிலும் (sen nosides Aand B) காணப்படுகிறது. ஆனால் தூய நிலாவாரை என்னும் போது நாட்டின் நிலாவாரையே. ஆனால் இதற்குப் பதில் காட்டு நிலாவாரையையும் பயன்படுத்தலாம்.

காட்டு நிலாவாரை ஓராண்டுச் செடி 30-120 Cmவரை தரையோடு படர்ந்து வளரக் கூடியது. இலைகள் 6-10Cm வரை நீளமுடைய முட்டை வடிவ மெல்லிய பச்சை நிறமுடைய இலைகள் உடையவை. பூக்கள் மெல்லிய மஞ்சள் நிறமுடையவை. இதில் நாட்டு நிலாவாரையானது வரண்ட நிலத்திலும் வளம் குறைந்த மணல்பாங்கான பிரதேசங்களி லும் வளரும். செம்மண் இதற்கு ஏற்றது.

இம் மூலிகைக்கு இரசாயன உரம் பூச்சி கொல்லிகள் தேவையில்லை. விதைகளை விதைத்து 90 நாட்டகளின் பின் முதல் தடவை முதல் இலைகளைப் பறிக்கலாம். இரண்டாம் 3ஆம் அறுவடை அண்ணளவாக 40 நாட்களின் பின் பறிக்கலாம். அறுவடை செய்த இலைகள் 7-10 நாட்கள் நிழலில் உலர வைக்க வேண்டும். இலைகள் மஞ்சள் கலந்த பச்சை நிறம் வரும் வரை உலர வைக்கவேண்டும். அதன் பின் மருந்துகளில் பயன்படுத்தக் கூடியதாக இருக்கும்.

பொதுவாக மருந்துகளில் பயன்படும் இலைகளை மழை காலத்தில் சேகரிக்காமல் வெப்ப காலத்தில் சேகரிக்க வேண்டும். வெப்ப காலத்தில் சேகரிக்கப்படும் இலைகள் மிக்க தரமானவையாக இருக்கும்.

இலைகள் தாவரங்களுக்கு வேண்டிய உணவைத்தயாரிக்கும் போது உட்பொருளாக நோய் தீர்க்கும் வேதியல் பொருட்களையும் தயாரிக்கின்றன.

நிலாவாரையை நிழலில் உயர்த்தி பொடிக்க வேண்டும்.பின்பு அரித்தெடுத்த பொடி 1-2 கிராம் அளவு எடுத்து 30ml வெண்ணீர் சேர்த்து மூடி வைத்து உறவிட்டு 20 நிமிடம் கழித்து வடித்துக்கொடுக்க வயிற்றுப்பீசம், வயிற்றுவலி நீங்கி மலம் நன்கு கழியும்.

நிலாவாரை குடிநீருடன் பழப்புளி சேர்த்து உடலில் பூசி வர சொறி, சிரங்கு,படை தேமல் போன்றவை நீங்கும்.

நிலாவாரை இலையை மருதோண்டி இலையுடன் சேர்த்து அரைத்துப்பூச முடி கறுக்கும்

**குடி நீர் பொது விதி**

குடிநீரில் சேர்க்கப்படும் சரக்குகளுக்கு 16 மடங்கு நீர் விட்டு 1/8 ஆக சுண்டக்காய்ச்சி வடித்து எடுக்கப்படும்.

**டாக்டர் திருமதி விவியன் சத்தியசீலன்** (M.D.C.S)
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்த மருத்துவத்துறை
யாழ் பல்கலைக்கழகம்,கைதடி

ஆனால் இலைகளை மட்டும் சேர்த்து குடிநீர் செய்யப்படின் 1/6 சுண்டக்காய்ச்சினால் போதும்.

## சிங்களத்தில் பதிவு செய்யப்பட்ட வாக்குமூலம் எனக்கு வாசித்துக் காட்டப்படவில்லை

### அக்ஷன் பெய்ம் ஊழியர் படுகொலை விசாரணையில் சாட்சியம்

(கொழும்பு)

பொலிஸ் அதிகாரிகளினால் என்னிடம் பெற்றுக்கொள்ளப்பட்ட வாக்குமூலம் சிங்கள மொழியிலேயே பதிவு செய்யப்பட்டது. ஆனாலும் இந்த வாக்கு மூலம் மீண்டும் எனக்கு வாசித்துக் காட்டப்படவில்லை என மூதூரில் கொல்லப்பட்ட அக்ஷன் பெய்ம் ஊழியர் கனகரத்தினம் கோவர்த்தனியின் உறவினர் ஒருவர் ஜனாதிபதி ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியமளிக்கையில் தெரிவித்தார்.

ஏ.சி.எவ். எனும் அரசசார்பற்ற தொண்டுநிறுவனமான அக்ஷன் பெய்ம் ஊழியர்கள் 17 பேர் 2006 ஆம்ஆண்டு ஆகஸ்ட் 5ஆம் திகதி கொலை செய்யப்பட்டமை தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணைகளில் நேற்று முன்தினம் சாட்சியமளித்த போதே கனகரத்தினம் கோவர்த்தனியின் உறவினர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர்தொடர்ந்து சாட்சியமளிக்கையில் மேலும் கூறியதாவது,

எனது வீட்டிலிருந்து சுமார் அரை கிலோ மீற்றர் தொலைவிலேயே கோவர்த்தனியின் வீடு அமைந்திருக்கின்றது. பணியின் நிமித்தம் கோவர்த்தனி மூதூருக்கு சென்றிருந்த விடயத்தை அவரது தந்தையினூடாக ஆகஸ்ட் மாதம்1ஆம்திகதியேஅறிந்துகொண்டேன். அத்துடன் அன்றைய தினத்திலிருந்து மூதூரின் நிலைமைகள் மிகவும் மோசமடைந் திருந்தமையையும் கேள்வியுற்றிருந்தேன்.

கோவர்த்தனி மற்றும் அவருடன் சென்றிருந்த அக்ஷன் பெய்ம் ஊழியர்கள் அனைவரும் அரச சார்பற்ற நிறுவன ஊழியர்கள் என்பதால் அவர்களுக்கு, சிக்கல்கள் ஏற்பட வாய்ப்பிருக்காது எனவும் எண்ணிக்கொண்டேன். மேலும் இவ்வாறான அசாதாரண சூழ் நிலைகளுக்கு மத்தியில்கோவர்த்தனி மூதூரிலிருந்து திருகோணமலைக்கு வந்து விடுவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டிருந்தாரா என்பது குறித்து எனக்கு தெரியாது.

மூதூருக்குச் சென்ற கோர்வத்தனி ஆகஸ்ட் மாதம் 4 ஆம்திகதி அவரது மூத்த சகோதரியிடம் தொலைபேசினூடாக பேசியுள்ளார். இந்த விடயத்தை கோவர்த்தனி கொல்லப்பட்ட பின்னர் அதாவது 7 ஆம்திகதி அவரது சகோதரியின் மூலம் தெரிந்து கொண்டேன்.

கோவர்த்தனி தனது சகோதரியுடன் தொலைபேசியில் பேசிய போது மூதூரில் வெடிச்சத் தங்கள் கேட்டுக்கொண்டிருப்பதாகவும் அத்துடன் அசாதாரண சூழ்நிலைகள் தோன்றியிருப்பதாகவும் கூறியுள்ளார். மேலும் மூதூரிலிருந்து மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு இடம் பெயர்ந்துகொண்டிருந்ததாகவும்தெரிவித்துள்ளார்.

மோதல்கள் காரணமாக மக்கள் இடம் பெயர்ந்து கொண்டிருக்கின்ற சமயத்தில் அக்ஷன் பெய்ம் ஊழியர்கள் எவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தனர் என்பதை நான் அறியவில்லை. சம்பவம்இடம்பெற்ற சில தினங்களின் பின்னர் அதாவது 8 ஆம்திகதி கோவர்த்தனியின்சடலத்தை அடையாளம்காண்பதற்கென நீதிவானால் எனக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. அப்போது கோவர்த்தனியின் கால் விரல்களிலுள்ள விசேட அடையாளம் மற்றும் அவரது முகம் ஆகியவற்றை வைத்து நீதிவானுக்கு அடையாளம் காட்டினேன். ஆகஸ்ட் மாதம் 8 ஆம்திகதி நீதிவானிடமும் பொலிஸ் அதிகாரியிடமும்சாட்சியளித்திருந்தேன். பொலிஸ் அதிகாரியினால் என்னிடம் பெற்றுக்கொள்ளப்பட்ட சாட்சியம் சிங்கள மொழியிலேயே பதிவு செய்யப்பட்டது. ஆனால்அந்த வாக்கு மூலம் மீண்டும்என்னிடம்வாசித்துக்காட்டப்படவில்லை. அதனை நானும் வாசித்துப் பார்க்கவில்லை.

இந்நிலையில், ஜனாதிபதி ஆணைக் குழுவினால் என்னிடமிருந்து பெற்றுக்கொள்ளப் பட்ட வாக்குமூலம் 200 8 பெப்ரவரி மாதம் 26 ஆம் திகதியன்று அதனை பதிவு செய்தவரால்தமிழ் மொழியில் வாசித்துக் காட்டப்பட்டது. அதனை நான் ஏற்றுக் கொள்ளக்கூடியதாகவும் இருந்தது. (அ-5)

## கிழக்கு மாகாண சபைத்தேர்தல் பேரினவாத நோக்கம் கொண்டது

### புதிய-ஜனநாயகக் கட்சி

(கொழும்பு)

எதிர்வரும் கிழக்கு மாகாண சபைத் தேர்தல் மகிந்த சிந்தனை ஆட்சியின் பேரினவாத உள்நோக்கங்களை முன்னெடுக்கும்ஒரு கருவியாகவே முன்னெடுக்கப்படுகிறது. தேசிய இனப்பிரச்சினை இருந்து வருவதை நிராகரித்து யுத்தம் முன்னெடுக்கப்படுவதை வலியுறுத்தியேஇத்தேர்தல்நடாத்தப்படுகிறது.வடக்கு கிழக்குத் தமிழ் மக்களை பிரிக்கவும் தமிழ் முஸ்லிம்மக்களிடையேமோதல்களை உருவாக்கவும் இத் தேர்தல் பயன்படப் போகின்றது. ஆதலால் அர்த்தமற்ற இக் கிழக்கு மாகாண சபைத் தேர் தலில் எமது புதிய- ஜனநாயகக் கட்சி எவ்விதத்திலும் பங்கு கொள்ளவில்லை.

இவ்வாறு புதிய-ஜனநாயக க் கட்சியின் அரசியல்குழு சார்பாக அதன் பொதுச் செயலா ளர் சி. கா. செந்திவேல் கிழக்கு மாகாண சபைத் தேர்தல் பற்றி வெளியிட்டுள்ள அறிக்கை யில் தெரிவித்துள்ளார்.

மேலும் அவ் அறிக்கையில்அரசியல் தீர்வுக்குரிய நியாயமான யோசனைகள் எதுவும் உருப்படியாக முன்வைக்கப்படாது. யுத்தத்தை மும்முரமாக்கிநிற்கும் சூழலில் கிழக்கு மாகாண சபைத் தேர்தலை அரசாங்கம் நடத்துவது மக்கள் மீதான அரசியல் ஏமாற்றும் திசை திருப்பலுமாகும். வடக்கு கிழக்கில் இயல்பு வாழ்வும் ஜனநாயகமும் மனித உரிமைகளும் இல்லை. அதேவேளை யுத்தத்தாலும்சுனாமி அழிவுகளாலும் பாதிக்கப்பட்ட கிழக்கு மக்களுக்குரிய புனரமைப்பும் புனர்வாழ்வும் மீள் குடியமர்வும் உரியவாறு முன்னெடுக்கப்படவில்லை. ஆயுத இயக்கங்களின் அச்சுறுத்தல்கள், அடாவடித்தனங்கள் மத்தியிலேயே கிழக்கு மக்கள் வாழ்ந்து வருகின்றனர். அரசாங்கப்படைகளின் அடக்குமுறைகள் அங்கு தொடர்கின்றன. அத்துடன் தமிழ், முஸ்லிம் மக்களிடையேயான உறவுகள் சீர்குலைக்கப்பட்டு மோதல்கள் வலுப்படக் கூடிய சூழலை இத்தேர்தல் தோற்றுவித்து விடுமோ என அஞ்சப்படுகிறது.

வடக்கிலிருந்து கிழக்கு பிரிக்கப்பட்ட நிலையிலும் தமிழ், முஸ்லிம் உறவுக்குரிய அடிப்படைகள் தோற்றுவிக்கப்படாத சூழலிலும் இத் தேர்தல் நடாத்தப்படுகிறது. தேசிய இனப்பிரச்சிணைக்குஉரிய தீர்வு முன்வைக்கப்படாது வடக்கு நோக்கிய யுத்தம் முனைப்பாக் கப்பட்டு வருகிறது. இந்நிலையில் கிழக்கில் நடாத்தப்படும்மாகாணசபைத் தேர்தல் பேரினவாத நிகழ்ச் சித் நிரலுக்கான ஒருநடவடிக்கையே தவிர வேறு எதுவும் இல்லை. (அ)

## முகாபே வெற்றி பெற்றதாக முடிவு வந்தால் ஏற்றுக்கொள்ளப்போவதில்லை

# எதிர்கட்சிகள் தெரிவிப்பு

சிம்பவே தேர்தலில் தானே வெற்றி பெற்றதாக அந்த நாட்டு அதிபர் றொபேட் முகாபே அறிவித்தால் அதனை தாம் ஏற்கமாட்டோம் என்று அந்த நாட்டின் எதிர்க் கட்சிகள் கூறியுள்ளன.

இந்தத் தேர்தலில் தாமே வெற்றி பெற்றதாக நம்பும் ஜனநாயக மாற்றத்துக்கான இயக்கம் அதிபர் பதவிக்கும் மற்றும் நாடாளுமன்றத்துக்குமான தேர்தல் முடிவுகளில் அரசாங்கம் மோசடி செய்ய முயற்சிப்பதாக குற்றஞ்சாட்டியுள்ளது.

ஷானு பிஎவ் கட்சியும் ஜனநாயக மாற்றத்துக்கான இயக்கமும் சம அளவிலான இடங்களை வென்றதாக முதல் அதிகார பூர்வ முடிவு கூறுகிறது. ஆனால் அரசாங்கக் கட்சியின் பலம் மிக்க இடங்களில் எதிர்க்கட்சி முன்னணியில் இருப்பதாகவும் அது கூறியது. வாக் களிப்பு முடிவடைந்து 30 மணித்தியாலங்களின் பின்னர் தேர்தல் முடிவுகள் வெளியாகத் தொடங்கியுள்ளன.

இது தேர்தல் கண்காணிப்பாளர்கள் மத்தியில் கேள்விகளை எழுப்பியுள்ளதாக ஒரு பிபிசி செய்தியாளர் தெரிவித்துள்ளார். (அ-5)

## உலகில் அதிகளவானோர் பின்பற்றும் மதமாக இஸ்லாம்

### வத்திக்கான் மதகுரு தகவல்

உலகில் அதிகளவானோர் பின்பற்றும் மதம் என்ற பெருமையைப் பெற்ற ரோமன் கத்தோலிக்க மதத்தை இஸ்லாம் மிஞ்சிவிட்டதாக வத்திக்கான் மதகுரு ஒருவர் தெரிவித்துள்ளார்.

எமது வரலாற்றில் முதல் தடவையாக நாம் முன்னணியிடத்திலிருந்து கீழிறக்கப்பட்டுள்ளோம். அவ்விடத்தை முஸ்லிம்கள் கைப்பற்றியுள்ளனர் என சிரேஷ்ட ரோமன் கத்தோலிக்க மத குருவான வித்தோரியோ போர்மெந்தி வத்திக்கான் புதினப் பத்திரிகையான எல் ஒஸெர் வேடோர் ரொமனோவுக்கு அளித்த பேட்டியில் குறிப்பிட்டுள்ளார்.

உலக சனத்தொகையில் ரோமன் கத்தோலிக் கர்களின் தொகை 17.4 சதவீதமாக உள்ள நிலையில் முஸ்லிம்களின் தொகை 19.2 சத வீதமாக உயர்ந்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

முஸ்லிம்களின் குடும்பங்களில் வாரிசுகள் அதிகளவில் காணப்படுவதும் கிறிஸ்தவர்களின் குடும்பங்களில் வாரிசுகளின் எண்ணிக்கை குறைவாகக் காணப்படுவதும் இதற்குக் காரணமென அவர் குறிப்பிட்டார்.

எனினும் ரோமன் கத்தோலிக்கர்களை மட்டும் கருத்தில் கொள்ளாமல் அனைத்து கிறிஸ்தவர்கள் தொடர்பிலும் மதிப்பீட்டை மேற்கொள்ளும்போது கிறிஸ்தவர்களின் தொகை உலக சனத்தொகையில் 33 சதவீதமாக உள்ளதாக அவர் கூறினார். (அ-5)

## பிக்கு உடையில் இராணுவத்தினர் தாக்குதல்

## தலாய்லாமா குற்றச்சாட்டு, சீனா மறுப்பு

(பெய்ஜிங்)

திபெத்தில் உள்ள லாசா நகரில் நடைபெற்ற கலவரங்களுக்கு பின்னணியில் சீனா இருக்கலாம் என்ற திபெத் ஆன்மீகத் தலைவர் தலாய் லாமாவின குற்றச்சாட்டுகளை சீனா மறுத்துள்ளது.

தலாய்லாமாவின் குற்றச்சாட்டு அவரது குற்ற உணர்வை வெளிப்படுத்துவதாக உள்ளது என்றும் வதந்திகள் மூலம் பிரச்சினையை திசை திருப்ப அவர் முயற்சிப்பதாகவும் சீன வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் ஜியாங் யூ கூறியுள்ளார்.

தலாய்லாமா கூறும் குற்றச்சாட்டுக்கள் இந்தப் பிரச்சினையில் உண்மையை மறைக்க உதவாது என்று அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த சில தினங்களுக்கு முன்பு டெல்லியில் செய்தியாளரிடம் பேசிய தலாய்லாமா சீன இராணுவ வீரர்கள், புத்தபிக்குகள் போன்று உடையணிந்து கொண்டு தாக்குதல் நடத்தியதாகவும் சீன இராணுவத்தினர் அதிக எண்ணிக்கையில் பிக்குகளின் உடைகளை வாங்கியிருப்பதாகவும் குற்றம் சாட்டினார்.

லாசாவின் வன்முறையை தாம் தூண்டி விடு வதாக சீன அதிபர் தெரிவித்த புகாரை மறுத்த தலாய்லாமா இவ்வாறு கூறி யிருந்தார். (அ-5)

## கமலேஸ்சர்மா செயலாளராக தெரிவு

(லண்டன்)

பொது நலவாய அமைப்பின் புதிய பொதுச் செயலாளராக இந்தியாவின் கமலேஷ்சர்மா (66) தேர்வு செய்யப்பட்டுள்ளார். இப்பொறுப்பை ஏற்க உள்ள முதல் இந்தியர் இவர் என்பது குறிப் பிடத்தக்கது. பொதுநலவாய அமைப்பில் உறுப்பினராக 53 நாடுகள் உள்ளன. (அ-5)

## ஆடை அணிவதில் முதலிடத்தில் நடிகர் ஜேம்ஸ் பாண்ட்

இங்கிலாந்தில் உள்ள ஒரு பத்திரிகை மிக மோசமாக உடை அணியும் பிரமுகர்கள் பற்றி கணக்கெடுப்பு நடத்தியது. மிடுக்காக உடை அணியாமல் மோசமாக உடை அணியும் பிரமுகர்கள் பட்டியலில் இங்கிலாந்து இளவரசர் வில்லியம், அவரது தந்தை சார்லஸ் இளவரசர் ஹாரி ஆகியோர் இடம் பெற்றுள்ளனர். இளவரசர் வில்லியம் இதில் 16ஆவது இடத்தை பிடித்திருக்கிறார். மோசமாக உடை அணிபவர்கள் பட்டியலில் பிரதமர் கோர்டன் பிரவுன் 3ஆவது இடத்தை பிடித்துள்ளார்.

மிடுக்கான தோற்றத்துடன் பாஷன் ஆடைகளை சிறந்த முறையில் அணிபவர்கள் பட்டியலில் ஜேம்ஸ் பாண்ட் நடிகர் டேனியல் கிரேக் முதல் இடத்தை பிடித்திருக்கிறார். (அ-5)

# சிம்பாப்வேயில் உள்நாட்டு போர் அபாயம் தேர்தல் முடிவை அறிப்பதில் தாமதம்

(ஹராரே)

ஆபிரிக்க நாடுகளில் ஒன்றான சிம்பாப்வேயில் கடந்த சில நாட்களுக்கு முன்பு அதிபர் தேர்தல் நடைபெற்றது.

இந்த தேர்தலில் 28 ஆண்டுகளாக அதிபர் பதவியில் நீடித்த றொபேட் முகாபே மீண்டும் போட்டியிட்டார். அவரை எதிர்த்து எதிர்க்கட்சியான ஜனநாயக இயக்கம் சார்பில் மோர்கன் வான்கிரை போட்டியிட்டார். தேர்தல் முடிந்து ஓட்டு எண்ணிக்கை தொடங்கி 3 நாட்களுக்கு மேல் ஆகிவிட்டது. பெரும்பாலான இடங்களில் எதிர்க் கட்சிகளுக்கு வெற்றி கிடைத்துள்ளது.

நாங்கள் வெற்றி பெற்று விட்டோம். 28 ஆண்டுகள் பதவியில் இருந்த அதிபர் றொபேட் முகாபேயின் ஆட்சி முடிவுக்கு வந்து விட்டது என்று எதிர்க்கட்சிகள் அறிவித்துள்ளன.

ஆனால் தேர்தல் முடிவுகளை தேர்தல் கமிஷன் இன்னும் அறிவிக்காமல் காலம் தாழ்த்தி வருகிறது. தில்லு முல்லு செய்து வெற்றிபெற அதிபர் முகாபே முயற்சி செய்து வருவதாகவும் சில இடங் களில் ஓட்டுப் பெட்டிகளை திருடிச் சென்று விட்டதாகவும் எதிர்கட்சிகள் புகார் கூறியுள்ளன. இதனால் முகாபே ஆதரவாளர்களுக்கும் எதிர்க்கட்சியினருக்கும் இடையே ஆங்காங்கே மோதல் நடைபெற்று வருகிறது.

ஆனால் தில்லு முல்லு எதுவும் நடக்கவில்லை எதிர்க்கட்சியினர் தொடர்ந்து ரகளையில் ஈடுபட்டால் சிம்பாப்வேயில் புரட்சி வெடிக்கும் என்று அதிபர் முகாபே எச்சரித்துள்ளார். தேர்தல் முடிபுகள் முறைப்படி அறிவிக்கப் படாதநிலையில் அங்கு உள்நாட்டு போர் மூளும் அபாயம் அதிகரித்து வருகிறது. (அ-5)

## உலக தரிசனம்

## அரசுடன் பேசத் தயார் தலீபான் அறிவிப்பு

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் பிரதமர் கிலானி பேச்சு வார்த்தை நடத்த வருமாறு தீவிரவாதிகளுக்கு அழைப்பு விடுத்தார். இதை ஏற்று பேச்சு வார்த்தை நடத்த தயாராக இருப்பதாக பாகிஸ்தான் தலீபான் இயக்க தளபதிகளான மவுல்வி பகீர் முகமது, மவுல்லி ஷேர் பகதூர் ஆகியோர் தெரிவித்தனர். அவர்கள் பஜாவர் பழங்குடி மக்கள் பகுதியில் நடந்த பேரணியில் கலந்து கொண்டு பேசினார்கள். அப்போது அமெரிக்காவுடன் உள்ள தூதரக உற வை பாகிஸ்தான் துண்டித்துக்கொள்ள வேண்டும். அதோடு பழங்குடி இன மக்கள் வசிக்கும் பகுதியில் ஷரியத் சட்டத்தை நடை முறைப்படுத்த வேண்டும். இந்த 2 நடவடிக் கைகளையும் பாகிஸ் தான் அரசு செய்தால் பேச்சுவார்த்தை நடத்த தயாராக இருக்கிறோம் என்று தெரி வித்தார். ஆப்கானிஸ்தானில் அமெரிக்க இராணுவம் நீடித்து இருக்கும் வரை எங்கள் இயக் கத்தினர் ஆயுதங்களை ஒப்படைக்க மாட்டார் கள் என்றும் அவர்கள் தெரிவித்தனர். (அ-5)

## ஆறு உறுப்புக்களை வெளியே எடுத்து வைத்து அபூர்வ சத்திரசிகிச்சை, அமெ. நிபுணர் சாதனை

(மியாமி)

அடிவயிற்றில் புதைந்த புற்று நோயை விட மோசமானகட்டியை அழிக்க வயதான பெண்ணின் வயிறு கல்லீரல், மண்ணீரல், குடல் ஆகியவற்றை அப்புறப்படுத்தி அபூர்வ சத்திரசிகிச்சையை அமெரிக்க நிபுணர்கள் வெற்றி கரமாக செய்துள்ளனர்.

அமெரிக்காவில் புளாரிடா மாநிலத்தை சேர்ந்தவர் ப்ரோக் செப். வயது 63. இவருக்கு அடிவயிற்றில் பெரிய கட்டி இருந்தது. ஆனால் வெளியே தெரியாமல் புதைந்து கிடந்தது. இது புற்று நோயை விட மோசமானது. 'லியோ மைசர் கோமா' என்ற அரியவகை புற்று நோய் தாக்கியிருந்தது. மியாமி பல்கலைக்கழக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார் ப்ரோக். பிரபல அறுவைச் சிகிச்சை நிபுணர் டொமாகி கடோ பரிசோதித்தார். அடிவயிற்று கட்டியை அப்புறப்படுத்துவது பற்றி சக நிபுணர்களுடன் ஆலோசித்தார்.




அடிவயிற்றில் ஆழமாக புதைந்து கிடந்தால் ப்ரோக்கின் உடலில் இருந்து ஆறு உறுப்புக்களை அப்புறப்படுத்தி வெளியே வைத்து விட்டு பின் கட்டியை நீக்க முடியும் என்று முடிவு செய்தார் கடோ. இதைத் தொடர்ந்து ப்ரோக்குக்கு 15 மணி நேர சத்திரசிகிச்சை நடந்தது அவரின் உடலில் இருந்து வயிறு, கணையம், கல்லீரல், மண்ணீரல், சிறு குடல், பெருங்குடல் ஆகிய ஆறு உறுப்புகள் வெளியே எடுத்து பாதுகாப்பாக வைக்கப் பட்டன. அதன்பின் அடிவயிற்றில் கட்டியை சுற்றிய இரு ரத்த நாளங்கள் பாதுகாப்பாக வெளியே எடுத்து வைக்கப்பட்டன. அதன் பின் இரண்டு அங்குர சுற்றளவுக்கு காணப்பட்ட கட்டியை டாக்டர்கள் அகற்றினர்.

அதன்பின் மீண்டும் ரத்த நாளங்களையும் ஆறு உறுப்புக்களையும் அவை இருந்த இடங்களில் துல்லியமாக கணக்கிட்டு வைத்து விட்டனர். இது குறித்து கடோ கூறுகையில் மிகவும் சிக்கலான சத்திரசிகிச்சை. ஆனால் வெற்றி கரமாகமுடித்து விட்டோம். அவர் அடிவயிற்றில் இருந்த கட்டி முழுவதுமாக நீக்கப்பட்டு விட்டது. மீண்டும் பொருத்தப்பட்ட உறுப்புகளும் இயல்பாக இயங்க ஆரம்பித்துவிட்டன. எங்களுக்கே அபூர்வமான அறுவை சிசிச்சை இது என்று தெரிவித்தார்.

ஜப்பானைச் சேர்ந்த கடோ, இது போன்ற அறுவைசிசிச்சைகளில் சிறந்தவர். அதனால் அவரால் தைரியமாக பெண்ணின் அடிவ யிற்று கட்டியை நீக்க ஆறு உறுப்புக்களை வெளியே எடுத்துச் செய்ய தைரியம் வந்தது. கடந்த 2000 இல் அமெரிக்க ஹுஸ்டனை சேர்ந்த மைக்கேல் ரியர்டன் என்பவர் ஒரு நோயாளி உடலில் ஏற்பட்ட நான்கு புற்று நோய் கட்டிகளை அகற்ற அவரின் இதயத்தை வெளியே எடுத்து வைத்து சத்திர சிகிச்சை செய்தார். புற்று நோய்க் கட்டிகள் வெற்றி கரமாக அகற்றப்பட்டன. ஆனால் சில மாதங்க ளில் நோயாளி இறந்து விட்டார்.

இப்போது ஆறு உறுப்புக்களை வெளியே எடுத்து புற்று நோய்க்கட்டி அகற்றப் பட்ட ப்ரோக் உடல் நிலை சீராகஉள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-5)

## சர்வமத கூட்டத்திற்கு சவுதி மன்னர் அழைப்பு

(ரியாத்)

ஒருவரே கடவுள் என்பதில் நம்பிக்கை கொண்டுள்ள மதங்களை சேர்ந்தவர்கள். அவர்களது மத நம்பிக்கையின் அடிப்ப டையில் வழிபாடு நடத்துவது தொடர்பாக பேச்சு நடத்த சவுதி மன்னர் அப்துல்ல ா அழைப்பு விடுத்துள்ளார்.

தங்களை அவமதிக்கும் வகையில் டென்மார்க் ஓவியர்கள் வரைந்த கார்ட்டூன்கள் இருப்பதாக முஸ்லிம்கள் கொதிப்படைந்ததை தொடர்ந்து இரண்டு ஆண்டுகளாக மத மோதல் அபாயம் நீடித்து வருகிறது. ஐரோப்பிய பதிப்பகம் இந்த ஓவியங்களை வெளியிட்டதை தொடர்ந்து. அல்கொய்தா தலைவர் ஒசாமா பின் லேடன் பெரிதும் கொதிப்படைந்தார். இஸ்லா முக்கு எதிராக புதிய யுத்தம் துவக்கப்பட்டுள் ளது. இதில் போப் 16 வது பெனிடிக்கிற்கு முக்கிய பங்கு உள்ளது. இதற்குக்காரணமானவர்கள். கடுமையான விளைவுகளை சந்திப்பர் என்று மிரட்டல் விடுத்தார்.

இப்பிரச்சினையில் மற்றொரு திருப்பமாக சவுதி மன்னர் அப்துல்லாவின் அழைப்பு அமைந்துள்ளது. முஸ்லிம் நாடுகளில் பிற மதத்தவர்கள் வழிபாடுகள்தடை செய்யப்பட்டுள் ளது. இதை விலக்கும் வகையில் ஒருவரே கடவுள் என்ற நம்பிக்கை கொண்ட மதத்தவர்கள். தங்களது மதவழிபாட்டை நடத்துவது குறித்து பேச்சு நடத்த சவுதி மன்னர் அழைப்பு விடுத்துள்ளார். இதற்கு இஸ்லாமிய மதத்தலைவர்கள் பச்சைக்கொடி காட்டியிருப்பதாகவும் இது தொடர்பாக பிற நாட்டு முஸ்லிம் தலைவர் களின் கருத்தை அறிய இருப்பதாகவும் மன்னர் அப்துல்லா தெரிவித்துள்ளார். (அ-5)

## 24 மந்திரிகள் பதவி ஏற்றனர்

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் 24 மந்திரிகள் நியமிக்கப்பட்டனர். புதிய மந்திரிகள் அனைவருக்கும் அதிபர் முஷாரப் பதவி பிரமாணம் செய்து வைத்தார். ஜனாதிபதி மாளிகையில் பதவி ஏற்பு விழா நடந்தது. இதில்பிரதமர் கிலானி, இராணுவ சிவில் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

24 மந்திரிகளில் 11 பேர் பெனாசிர் கட்சியை சேர்ந்தவர்கள். 9 மந்திரிகள் நவாஸ் ஷெரீப்பின் முஸ்லிம் லீக் கட்சியை சேர்ந் தவர்கள். மீதி 4மந்திரிகளில் ஒருவர் சுயேச் சையாக வெற்றி பெற்றவர். மீதி 3 பேரும்2 சிறிய கட்சிகளை சேர்ந்தவர்கள் ஆவார்கள்.

பாகிஸ்தான் மக்கள் கட்சியை சேர்ந்த மக்தூம் ஷா மெக்மூத் குரேஷிபுதிய வெளிநாட்டு மந்திரியாக நியமிக்கப்பட்டு இருக்கிறார். சவுத்ரி அகமது முக்தார் புதிய இராணுவ மந்திரியாக நியமிக்கப்பட்டார். (அ-5)

# இந்தியாவில் இலங்கை அகதிகள்

## இவ்வெட்கக்கேட்டிற்கு நாம் காரணகர்த்தாக்களா?

தமது உயிர்களுக்குண்டான அச்சம் காரணமாக இலங்கையை விட்டு இந்தியாவிற்கு ஓடி அங்கு அகதிமுகாம்களில் வாழ்ந்து கொண்டிருக்கும் இலங்கையர்களைச் சந்திப்பதற்காகச் சென்ற நான் அங்கு நடப்பவைகளையும் அங்குள்ள உணர்வுகளையும் கண்டும் கேட்டும் உணர்ந்தும் பின்னர் அவைகளிலிருந்து என்ன விதமானதொரு அறிவுணர்வைப்பெறுவதென யோசித்துக்கொண்டு சென்னை விமான நிலையத்தில் உட்கார்ந்துகொண்டிருந்தேன் அகதிகளுக்கென்று.

அர்ப்பணிக்கப்பட்ட உதிர்ந்த இலைகள் எனும் ஜோன் டென்வரின் உணர்ச்சி பூர்வமான பாடல் தான் எனக்கு ஞாபகம் வந்தது. அப்பாடலில் வரும் ஒரு வரி மட்டும் மீண்டும் மீண்டும் என் நினைவில் வந்ததால் இக் கட்டுரையைப் பிரதிபலிப்பதற்காக அதையே தலைப்பாக இட்டிருக்கிறேன்.

இரவிரவாக ஒரு பேருந்தில் பிரயாணம் செய்து விமான நிலையத்தை அடைந்த பின்னர் நானும் ஒரு அகதிபோலவே உணர்ந்தேன். இரவுப்புகையிரதத்தில் பயணஞ்செய்து, பின்னர் 26 குடும்பங்களைத் தற்போது அடக்கியிருக்கும் ஒரு பண்டகசாலையில் நாள் முழுக்கக் கழித்துவிட்டு, இடையிடையே வேறு பல புகையிரதங்கள், பேருந்துகள் மற்றும் முச்சக்கர வண்டிப் பயணங்களையும் மேற்கொண்டு விட்டுத் திரும்பவும் இரவுப்பேருந்தைப் பிடித்து



விமானநிலையத்திற்கு வருவதென்பது சுலபமான பயணமல்ல.

ஆனால் நான் சந்தித்த மக்கள் சனநெருக்கமான கட்டுமரங்களில் பெருஞ்சிரமங்களுக்கு மத்தியில் செய்த கடுமையான பிரயாணங்களுடன் ஒப்பிடும்போது எனது பிரயாணம் கடினமானதல்லவென்றே நினைக்கின்றேன் எனது பயணமானது சென்னையில் ஒரு மாநாட்டிற்குச் சமூகமளிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட அதேநேரம் அவர்களது பயணமோ இலங்கையில் இருக்கமுடியாமல் இந்தியாவிற்குத் தப்பிச் சென்ற மரணத்திற்கும் உயிருக்குமான போராட்டமாகும்.

சிலர் 10,000 ரூபாய்கள் வரையில் கொடுத்து 10 இலிருந்து 40 பேர் வரையில் ஏற்றும் பாவனைக்குதவாத படகுகளில் பிரயாணத்தை மேற்கொள்கிறார்கள். தமது 3 குழந்தைகளும் பிரயாணத்தின்போது வாந்தியெடுத்து மயங்கி விழுந்ததாக ஒரு தாய் என்னிடம் கூறினார். முரட்டுத்தனமான கடல் அலைகளை மட்டுமல்லாமல் குண்டுமழைபொழியும் இலங்கைக்கடற் படையினரையும் இவர்கள் துணிந்து எதிர்கொள்கிறார்கள். அத்துடன் கடற்படையினருக்கும் கடற்புலிகளுக்குமிடையே நடக்கும் கடற்சமரையும் இவர்கள் தாண்டிச் செல்லவேண்டியிருக்கிறது. கடந்த வருடம் மன்னார் கடற்பரப்பில் பல மக்கள் கொல்லப்பட்டது என் நினைவிற்கு வருகிறது. அது மாதிரியான பல சம்பவங்கள் நிகழ்ந்த போதும் அதுவொன்றையே ஊடகங்கள் வெளிப்படுத்தின என என்னுடனிருந்த ஒரு பாதிரியார் நினைவுபடுத்தினார். மன்னார் தீவிலிருந்து மக்கள் வெளியேறும் இடங்களாவன பொதுவாக பேசாலையும் தலைமன்னாருமே.

சில வருடங்களுக்கு முன்னர் இதேமாதிரியான பயங்கரமான கடற்பயணங்களை 2ஆயிரம் ரூபாய்கள் வரை கொடுத்து மக்கள் பண்டங்களை வாங்குவதற்காக மேற்கொண்டிருக்கின்றனர். அது சட்டவிரோதமாக இருந்த போதும் கூட மன்னாரிலிருந்து கொழும்பிற்கு வந்து போகும் வழக்கமான பிரயாணம் போலவே அதுவும் வாழ்க்கையில் ஏற்றுக்கொள்ளப்பட்டதொரு நிகழ்வாக விருந்து பல தசாப்தங்களுக்கு முன்னர் வழமையான படகுச் சேவைகள் இருந்த நேரம் இலங்கையின் எல்லாப் பாகங்களிலிருந்தும் மக்கள் இந்தியாவிற்குச் சென்று வந்து கதைகளை எனது தாயாரும் வேறு பலரும் என்னிடம் சொல்லியிருந்தனர்.

### இந்தியாவிற்கு வருகை

இந்தியாவிற்குப் படகுகளில் தப்பிவரும் மக்களைச் சந்திக்கும் இந்திய அதிகாரிகள் அவர்களிடம் விடுதலைப்புலிகள் அல்லது ஏனைய ஆயுதக்குழுக்களின் தொடர்புகள் உள்ளதா எனக் குறிப்பாக விசாரிக்கின்றனர். வழமையாக அவர்கள் மண்டபம் என்ற இடைக்கால முகாமில் சில நாட்கள் தங்க நிர்ப்பந்திக்கப்படுவர். அங்கு தங்கியிருக்கும் நாட்கள் வித்தியாசப்பட்டாலும் ஒருவர் என்னிடம் பேசும்போது தாம் 26 நாட்கள் அங்கு காத்திருந்ததாகக் குறிப்பிட்டார். சிலர் குறுகிய காலப்பகுதிவரையே தங்கியதாகச் சொன்னார்கள். பின்னர் அவர்கள் எல்லோரும் நிரந்தரமான முகாம்களுக்கு அனுப்பப்படுவர். சில இந்திய அதிகாரிகள் அவரவர்களுக்கு விருப்பமான முகாம்களுக்குப் போகவும் சந்தர்ப்பமளிக்கப்படுவதாக நான் கேள்விப்பட்டேன்.

தமது கண்காணிப்பில் பரவியிருந்த மக்கள் குழுவைச் சந்திப்பதற்காக அருகிலிருந்த இரு கத்தோலிக்கப் பாதிரிமாரையும் அகதிகளுக்கு உதவும் தேவாலயத்துடன் சம்பந்தப்பட்ட அரச சார்பற்ற நிறுவனத்தின் இரு ஊழியர்களையும் நான் சந்தித்தேன். பல இளைஞர்கள், பெண்கள், ஆண்களுடன் நாம் பேச்சுக் கொடுத்தோம். நாம் அங்கு தங்கியிருந்த குறுகிய காலத்தில் வீரிட்டழும் குழந்தைகளினதும் கீச்சிடும் சிறுவர்களினதும் குரல்கள் காற்றை நிறைத்தன. தாம் அங்கு தங்கியிருந்த ஒன்றரை வருட காலத்தில் 5 குழந்தைகள் அச்சமூகத்தில் பிறந்ததாகச் சொன்னார்கள்.

நான் சென்ற முகாமானது பல சிறிய முகாம்களில் ஒன்றெனவும் அதில் அப்போது 26 குடும்பங்கள் வசித்ததாகவும் தர்மபுரி பகுதியிலும் தமிழ்நாட்டின் ஏனைய பகுதிகளிலும் 12 வேறு பெரிய முகாம்கள் இருப்பதாகவும் என்னிடம் கூறப்பட்டது. இவ்வாரம் பிரசுரிக்கப்பட்ட ஒரு கட்டுரையின்படி தமிழ்நாட்டில் 97 ஆயிரத்திற்கும் அதிகமான இலங்கை அகதிகள் 117 முகாம்களிலும் மற்றும் 60 ஆயிரம் பேர் முகாம்களுக்கு வெளியேயும் வசிக்கின்றனர். இந்திய வெளிவிவகார அமைச்சின் தகவல்களின்படி குறிப்பாக வன்முறைகளின் பின்னர் இந்தியாவிற்குத் தப்பியவர்களில் 2007 ஜனவரிக்கும் பெப்ரவரிக்குமிடையிலான ஆறு வார காலப்பகுதியில் 16 ஆயிரம் அகதிகளும் மற்றும் 2006 ஓகஸ்டில் 6ஆயிரம் அகதிகளும் வருகை தந்துள்ளனர்.

இம் முகாம்களுக்கு யார் யார் வருகை தருகிறார்கள் என்பதை இந்திய அதிகாரிகள் கண்காணிப்பதாகச் சில தன்னார்வத்தொண்டர்கள் என்னிடம் கூறியதுடன் சென்னையிலுள்ள எனது சில நண்பர்கள் நான் பின்தொடரப் படக் கூடும் எனவும் எச்சரித்தனர். ஆனாலும் யாழ்ப் பாணத்தில் பின்தொடரப்பட்டால் அதை உடனடியாக நாம் உணர்வதுபோல இங்கு எந்த விதமான இடைஞ்சல்களோ இரகசியப் பொலிஸாரின் பின்தொடரல்களோ எனக்கு நிகழவில்லை.

### பயத்தினாலும் பாதுகாப் பின்மையாலும் தப்பியோடுதல்

கடந்த டிசம்பர் மாத்தில் கூட நான் மிகவும் திறமான கடலுணவுண்டு அனுபவித்த பேசாலை நகரத்திலிருந்து தப்பியோடிய சிலருடன் நான் பேசினேன். கடற்படையினர் வீடுகளையும் படகுகளையும் எரித்தபடியும் மீனவர்கள் மீது துப்பாக்கிப்பிரயோகஞ்செய்தபடியும் தம்மைப்பின் தொடர்ந்து வருவதாகக் கேள்விப்பட்டுத் தேவாலயத்திற்கோடித் தஞ்சமடைந்ததாக ஒரு பெண் விவரித்தார். நாம் பாதுகாப்பாக இருப்போமென்று தேவாலயத்திற்கு ஓடினோம் .ஆனால் நாம் அங்கு உள்ளே இருந்தபோது இராணுவத்தினர் கிரனேட் களை உள்ளே வீசினர். அப்போது ஒரு பெண் கொல்லப்பட்டதுடன் 50 பேரளவில் காயமடைந்தனர் என அப்பெண் நினைவு கூர்ந் தார். தேவாலயத்திலும் கூட கடற்படையினர் தாக்குதல் நடத்தினால் நாமும் எமது குழந்தைகளும் போவதற்கு வேறு இடமேதுமில்லை என்பதால் தான் இங்கு வந்தோம் என இன்னொரு பெண் சொன்னார்.

பேசாலைக்கருகேயுள்ள வங்காலை என்னும் நகரத்தில் ஒரு முழுக்குடும்பமும் கொல்லப்பட்டதைப்பற்றி இன்னொரு பெண் நினைவு கூர்ந்தார். அந்தச் சம்பவத்திற்கும் பேசாலை தேவாலயச் சம்பவத்திற்கும் பின்னர்தான் தமது குழந்தைகளின் உயிர்களுக்குப் பாதுகப்பில்லை என்றுணர்ந்து தாம் வெளியேறத் தீர்மானித்ததாக அப்பெண் கூறினார்.

இம்முகாமிலிருக்கும் பலரும் போரின் காரணமாகப் பலமாகப் பாதிப்படைந்துள்ளனர். இங்கிருக்கும் ஒரு தாயின் ஒரேமகன் பல வருடங்களுக்கு முன்னர் கொல்லப்பட்டார். இன்னொரு பெண்ணின் கணவர் மீன்பிடித்துத் திரும்பிக் கொண்டிருக்கும் போது கையில் சுடப்பட்டுக் கடுங் காயத்திற்குள்ளானார். இவர் உயிர்தப்பிய போதும் கடற்படையினர் அவரை விசாரணைக்கு அழைத்ததால் பயந்து குடும்பத்துடன் வெளியேறிவிட்டனர்.

தன்னிரு மகன்களில் ஒருவர் விடுதலைப் புலிகளால் ஆட்சேர்க்கப்பட்டு விட்டதால் அவர்களை விட்டு விட்டுத் தாம் வந்துவிட்டதாக ஒரு தந்தையார் சொன்னார். விடுதலைப்புலிகள் ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள் மேற்கொண்ட தைத் தாம் பார்க்கவில்லையெனவும், ஆனால் அதைப் பற்றிக் கேள்விப்பட்டதாகவும் ஒரு பெண் கூறினார் .யாரை நாம் நம்புவது எமக்காகப் புலிகள் போராடுவதாக நாம் நினைத்தோம். ஆனால் இப்போது அது பற்றித் திட்டமாகக் கூறமுடியாமலிருக்கிறது என்று இன்னொருவர் கூறினார்.

கடற்பிரயாணத்தில் தமது குழந்தைகள் வாந்தியெடுத்து மயங்கியதாகக் கூறிய பெண் இந்தியாவிற்கு வருவதற்கு முன்னர் தின்மும் நடக்கும் வெடிச்சத்தங்கள் ஒவ்வொரு தடவையும் கேட்டபோதும் தாம் தமது குழந்தைகளை எண்ணிப் பயந்ததாகத் தெரிவித்தார். சில சமயம் நான் அவர்கள் படிக்கும் பள்ளிக்கூடத்திற்குப் போய் அவர்களுக்கு ஒன்றுமில்லையே என உறுதிப்படுத்துவேன் என்றார் அத்தாய்.

விரைவில் நிகழக்கூடிய மோதல்களிலிருந்து தமது குடும்பத்தையும் குழந்தைகளையும் காப்பாற்றுவதற்காகச் சிலர் முருங்கனிலிருந்தும் இந்தியாவிற்கு வந்துள்ளனர். இராணுவமும் விடுதல்லப்புலிகளுக்கும் மோதும் போது இடையில் அகப்பட்டு அப்பாவி மக்களான நாம் தான் பாதிக்கப்படுவோம். அதனால் நாம் இம் மோதல்கள் நிறுத்தப்படும் வரையில் தப்பிச் செல்வதென்று தீர்மானித்தோம் என 3 வயதுக் குழந்தையையுடைய ஒரு இளைஞர் கூறினார்.

### போர் ஓய்ந்திருந்தபோது வீடுகளுக்குத் திரும்பினாலும் மீண்டும் தப்பிவர வேண்டிய கட்டாயம்

இந்தியாவில் அகதிகளாக முன்னரும் பலர் இருந்திருக்கிறார்கள். 1990 களில் எனது குடும்பம் 4 வருடங்களாக இங்கிருந்தது. ஆனால் இங்கு வாழ்வது கடினமானதால் நிலைமைகள் அங்கு சீரடைந்திருக்குமென்றெண்ணி நாம் திரும்பிச்சென்றோம். ஆனாலும் மோதல்கள் மீண்டும் ஆரம்பமானதால் நாம் இங்கு மீண்டும் வரவேண்டியதாகி விட்டபோதிலும் இங்கும் நாம் துன்பப்படுகிறோம் எனத் தமது அனுபவங்களை வெளி யிட்டார் ஒருவர் .

முருங்கனிலிருந்து தப்பிவந் தோரில் ஒருவர் இந்தியாவிற்கு 3ஆவது முறையாக அகதியாக வந்துள்ளார். நிலைமைகள் சீரடைந்தது போலத் தெரிந்தபோது இரு தடவைகள் நான் திரும்பிச் சென்றேன். ஆனால் இரு தடவைகளும் நான் மீண்டும் ஓட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. இனி மேல் நான் திரும்புவேனோ தெரியாது. சில காலத்திற்குப் பின்னர் என்ன நடக்குமென்பதை சமாதானம் வருமா என்பதைக் கூட யாரால் சொல்ல முடியும்? என்று கேட்ட இவருக்கு நான் நம்பிக்கையைத் தளரவிடா தீர்கள் என்று சொல்லிச் சமாளிப்பதைத் தவிர எந்தப் பதிலையும் என்னால் சொல்ல முடியவில்லை.

### அகதியாக வாழ்தல்

இலங்கையில் தான் ஒரு நாளைக்கு 2ஆயிரம் ரூபாவிலிருந்து 3ஆயிரம் ரூபாய்கள் வரை சம்பாதித்ததாகச் சொல்லும் ஒரு மீனவர். தற்போது நிரந்தரமில்லாத நாட்கூலி வேலைகளைச் செய்யவேண்டியிருப்பதாக கூறினார். இம் முகாம்களில் வேலை செய்வது சட்ட ரீதியாக தமிழ்நாட்டு அரசாங்கத்தினால் அனுமதிக்கப்பட்டதா என்பது தெளிவாக இல்லாதபோதும், அது பற்றிப் பெரிதாக அலட்டிக்கொள்ளப் படவில்லையென்றே தோன்றுகிறது.

அவர்கள் வேலை செய்வதற்கு அனுமதி மறுக்கப்படும் பட்சத்தில் நிச்சயமாக இக்குடும்பங்கள் உயிர்வாழ முடியாது. பங்கீட்டு அடிப்படையில் 12 கிலோ அரிசியும் பெரியவர்களுக்கு ஆயிரம் இலங்கை ரூபாய் உதவிப்பணமும் சிறுவர்களுக்கு அவர்களின் வயதுக்கேற்றபடி தலா 250 ரூபாய்களும் கொடுக்கப்படுகிறது. காய் கறிகளோ மீன், இறைச்சியோ அவ்வக் குடும்பங்கள் தான் வாங்கிக்கொள்ளவேண்டும். சிறுவர் பாடசாலை செல்ல அனுமதிக்கப்படுவது டன் தன்னார்வத்தொண்டர்களினால் மாலை நேர வகுப்புகளும் மேலதிகமாக நடத்தப் படுகின்றன. இத்தன்னார்வத்தொண்டர்களின் அனுசரணையுடன் இலங்கையின் க.பொ.த. சாதாரண மற்றும் உயர்தரப் பரீட்சைகளையும் இங்கு நடத்துவதற்குரிய ஏற்பாடுகள் பற்றியும் நான் கேள்விப்பட்டேன். அம் முகாமிலிருந்தவர்களில் பெரும்பாலானவர்கள் கத்தோலிக்கர்கள் என்பதால் அருகிலுள்ள தேவாலய மதகுருவினது உதவியும் தங்களுக்குக் கிடைப்பதாகச் சிலர் குறிப்பிட்டனர். நாம் அங்கிருந்தபோது அங்கு தினசரி வருகை தரும் ஒரு அருட்சகோதரியைச் சந்தித்தோம். அவர் அங்கு மட்டுமல்லாமல் தர்மபுரிப் பகுதியிலுள்ள மேலும் 12 முகாம்களுக்கும் தவறாமல் செல்கின்றார்.

கையில் எதுவுமற்ற நிலையில் தான் பெரும்பான்மையான மக்கள் இங்கு வருவதால் அவர்களுக்குரிய சில சமையல் பாத்திரங்கள் வெவ்வேறு அரச சார்பற்ற நிறுவனங்களாலும் தேவாலயக்குழுக்களாலும் வழங்கப்பட்டுள்ளன. அத்துடன் பெரிய மண்டபத்திலுள்ள குடும்பங்கள் தத்தமக்கென அறைகளை பிரித்துக் கொள்வதற்காக கன்வஸ் துணிகள் வழங்கப்பட்டுள்ளன.

### திரும்பிச் செல்ல மிகுந்த அவா

அநேகமாக நான் பேச்சுக்கொடுத்த அனைவருமே இலங்கைக்குத் திரும்பிச்செல்ல மிகுந்த அவாவுடன் இருக்கிறார்கள். சிலர் இவ்வருடமே தாம் திரும்பும் நம்பிக்கையிருப்பதாகக் கூடச் சொன்னார்கள். எமது நாடு போல வராது. எனவே நாம் திரும்பிச்செல்லவே விரும்புகிறோம். ஆனாலும் மோதல்கள் இனித்தொடரா தென்றும் எமது பாதுகாப்பிற்கு உத்தரவாதம் கொடுத்த பின்னர் தான் திரும்புவோம் என ஒரு பெண் மிகவும் சரளமான சிங்களத்தில் என்னிடம் கூறினார். வானொலிச் செய்திகளைத் தொடர்ந்து கேட்டுவரும் அப்பெண் நான் கொழும்பில் கல்கிசையில் வசிப்பதாக சொன்னதும் நான் இந்தியாவிலிருந்தபோது கல்கிசையில் நடந்த பேரூந்துக்குண்டுவெடிப்பில் பலர் காயப்பட்டதைப் பற்றிக்கூறினார். முடிந்தவரையில் விரைவாக நாடு திரும்ப விரும்பும் இன்னொரு பெண் நாம் என்னதான் கஷ்டங்களை இங்கு அனுபவித்தாலும் குண்டுகள் பற்றிய பயமின்றி நிம்மதியாகத் தூங்குகிறோம் என்றார்.

### பயங்களெல்லாவற்றையும் கடந்த சமாதானத்துக்கான நம்பிக்கை

முகாம்களில் வசித்த மக்கள் எல்லோரும் மிக மகிழ்வுடன் எம்மை வரவேற்றுத்தாம் தூங்குவதற்கு உபயோகிக்கும் பாய்களை நாம் இருப்பதற்கென விரித்து உபசரித்தனர். அக்கட்டடம் மிகவும் வெப்பமாக இருந்தபோதும் அம்மக்களின் அன்பான உபசரணை எம்மைக்குளிர்வித்தது. எமது வருகையின்போது கேக் பழங்கள் மற்றும் தேனீர் என்பன வழங்கப்பட்டன. கொஞ்சம் சிங்களம் பேசத்தெரிந்த ஒரு வய



தான பெண் அடிக்கடி எம்மைச் சாப்பிடுமாறு கேட்டுக்கொண்டிருந்தார். இறுதியாக இலங்கை முறைப்படி திறமையான ஒரு மதிய உணவு எமக்குப் பரிமாறப்பட்டது. அவர்களுக்கு வழங்கப்படும் அரிசியை விட எமக்குப் பரிமாற்றப்பட்ட சோற்றின் அரிசி நன்றாகவிருந்ததால் அது வெளியிலிருந்து வாங்கப்பட்டதாக இருக்கலாமென அங்கு வேலை பார்க்கும் அருட்சகோதரியொருவர் சொன்னார்.

நான் அங்கு சந்தித்த மக்கள் பலரின் இடமான பேசாலை, முருங்கன் உள்ளிட்ட மன்னார். பகுதியிலுள்ளோரின் விருந்தோம்பலை நான் அனுபவித்திருக்கிறேன். அகதிகளாக நம்பிக்கையற்ற சூழ்நிலையிலிருந்தும் கூட அவர்களது விருந்தோம்பலையும் ஆழமான நட்புணர்வையும் நான் மிகவும் அனுபவித்தேன்.

**ருக்கி பெர்ணாண்டோ**

இம்மக்களின் முகங்களையும் அவர்களது கதைகளையும் நான் நினைவுகூரும்போது ஜோன் டென்வரது பாடலில் வரும் வார்த்தைகளான 'அவர்கள் யாரோ ஒரு தாயினது குழந்தைகளில்லையா... அல்லது அவர்கள் வெறுமனே தம்மைத்தாமே கொடுக்கும் தூசியிலிருந்து துசிக்கும் விதையிலிருந்து பிரிக்கப்படும் உதிரும் இலைகளா' என்பவை ஞாபகத்திற்கு வருகின்றது. நடந்தவைகளை நினைத்தும் எதிர் காலத்தையெண்ணியும் பார்க்கும் போது தனது பாடலை ஜோன் டென்வர் முடித்ததுபோல எனது நாட்டில் 'பயங்களெல்லாவற்றையும் கடந்த சமாதானம் வரவேண்டுமென நான் நம்புகிறேன்' அப் போது நான் இம்மக்களின் விருந்தோம்பலை அவர்களது வீட்டிலேயே நல்ல சூழ்நிலைகளில் அனுபவிப்பேன்.

நன்றி கிறவுண்ட் வியூஸ்

# அகமதாபாத் டெஸ்டில் யாருக்கு வாய்ப்பு? யுவராஜ், கைப் இடையே கடும் போட்டி

(அகமதாபாத்)

அகமதாபாத் போட்டிக்கான டெஸ்ட் அணியை தேர்வு செய்வதில் புதிய சிக்கல் ஏற்பட்டுள்ளது. காயம் காரணமாக இப் போட்டியிலிருந்து நீக்கப்பட்ட சச்சினுக்கு பதிலாக யுவ



ராஜ், கைப் ஆகிய இருவரில் யாரை களமிறக்குவது என்ற குழப்பத்தால் இந்திய தேர்வுக் குழுவினர் திணறி வருகின்றனர்.

இந்தியா வந்துள்ள தென்னாபிரிக்க அணி மூன்று டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடி வருகிறது. சென்னையில் நடந்த முதல் டெஸ்ட் சமநிலையில் முடிந்தது. ஐந்தாவது நாளில் சச்சினுக்கு இடுப்பு பகுதியில் வலி ஏற்பட்டது. இப்பிரச்சினை அவருக்கு அவுஸ்திரேலிய தொடரின் போதே காணப்பட்டது.

ஆனால் குணமடைந்துவிட்டதால் சென்னையில் விளையாடினார். தற்போது மீண்டும் வலி ஏற்பட்டுள்ளதால் அவர் நாளை அகமதாபாத்தில் ஆரம்பமாகும் இரண்டாவது டெஸ்டில் விளையாட மாட்டார் என அறிவிக் கப்பட்டுள்ளது. இவருக்கு பதிலாக கைப் 14 பேர் அணியில் சேர்க் கப்பட்டுள்ளார்.

சச்சினை தவிர்த்து சென்னையில் விளையாடிய அதே அணி தான் அகமதாபாத்திலும் விளையாடும் என்பதால் அவரது இடத்தை கைப்பற்ற போவது யார் என்ற கேள்வி எழுந்துள்ளது. இதில் கடந்த போட்டியில் 12ஆவது வீரராக வந்த யுவராஜ் மற்றும் பல மாதங்களாக அணியில் வாய்ப்பு கிடைக்காமல் தவித்து வந்த கைப் ஆகியோருக்கு இடையே கடும் போட்டி நிலவு கிறது.

**சாதனை ஜோடி:-** இவர்கள் இருவரும் இங்கிலாந்தில் நடந்த நாட்வெஸ்ட் தொடரின் இறுதிப்போட்டியில் இந்தியா வென்று, கோப்பை கைப்பற்ற முக்கிய காரணமாக இருந்தார்கள். இந்த ஜோடி 2000ஆம் ஆண்டு இலங்கை யில் நடந்த 19வயதுக்குட்பட்டோருக்கான உலக கோப்பையில் இந்திய அணிக்கு கோப்பை வென்று தந்தது. இப்படி பல சாதனைகளை படைத்தாலும் டெஸ்ட் அணியில் இடம்பிடிக்க முடியாமல் தவித்து வந்தனர்.

தற்போது இவர்களில் ஒருவருக்கு டெஸ்ட் வாய்ப்பு காத்திருக்கிறது. ஆனால், மற்றொருவருக்கு இடம்கிடைக்காது என்பது வருத்தமான விடயம். துரத்தும் துரதிஷ்டம்; இவர்கள் இருவரும் 2006ஆம் ஆண்டு நடந்த மேற்கிந்தியதீவுகள் சுற்றுப்பயணத்தில் விளையாடினார்கள்.

இதில் சச்சின், கங்குலி, இடம்பெறாததால் இவர்களுக்கு வாய்ப்பு கிடைத்தது. அதில் சிறப்பாக விளையாடிய கைப் (148) சதம் கடந்து அசத்தினார். மொத்தம் 226 ஓட்டங்கள் எடுத்து அதிக சராசரி (56.50) கொண்டவர்கள் வரிசையில் இரண்டாவது இடம்பிடித்தார். இத்தொடரில் யுவராஜ் மோசமாக விளையாடினார் (சராசரி 17.33) சச்சின், கங்குலி அடுத்த தொடரில் இடம்பெற துரதிஷ்டவசமாக இவர்கள் இருவருக்கும் வாய்ப்பு கிடைக்காமல் போனது. கடந்தாண்டு இறுதியில் நடந்த பாகிஸ்தான் தொடரில் யுவராஜுக்கு மீண்டும் வாய்ப்பு வழங்கப்பட்டது. இதில் சிறப்பாக விளையாடிய அவர் 169 ஓட்டங்கள் எடுத்து அசத்தினார். இது யுவராஜுக்கு சாதகமாக இருக்கிறது.

ஆனால் அவுஸ்திரேலிய தொடரில் 2டெஸ்டில் 17 ஓட்டங்கள் மட்டுமே எடுத்து மோசமான போர்மில் இருப்பதால் இவருக்கு பதிலாக கைப்பை சேர்க்க வேண்டும் என்ற கோரிக்கையும் எழுந்துள்ளது. கைப் சமீபகாலமாக உள்ளூர் போட்டியில் சிறப்பாக விளையாடி திறமையை நிரூபித்துள்ளார்.

ஆனால் இவரை விட யுவராஜ் அதிக டெஸ்டில் பங்கேற்றுள்ளார். களத்தடுப்பில் இரு வரும் அபாரமாக செயல் படக்கூடியவர்கள் என்பதால் வாய்ப் புகள் சம அளவில் இருக்கிறது. இதனால் இரண்டாவது டெஸ்டில் இவர்களில் யாரை தேர்வு செய்வது என்ற குழப்பத்தில் இந்திய தேர்வுக் குழுவினர் தவித்து வருகின்றனர். (5)

## துளிகள்

### படேல் விலகல்

சர்வதேச கிரிக்கெற் சபையின் தலைமை நிறைவேற்று அதிகாரி பதவிக்கு தேர்வு செய்யப்பட்ட தென்னாபிரிக்காவை சேர்ந்த இம்தியாஸ்படேல்தன்னால் அப் பதவியை வகிக்க முடயாது என்று விலகிவிட்டார். இப் பதவிக்கு தென்னாபிரிக்கா முன்னாள் தேர்வாளர் ஹரூன் லோர்கட், ஐ.சி.சி.பொது மேலாளர் டேவ் ரிச்சர்ட்சன் ஆகியோர் போட்டியிடுவார்கள் என்று தெரிகிறது. (5)

### தென்னாபிரிக்க அணிக்கு அபராதம் விதிப்பு

சென்னையில் நடந்த இந்தியா-தென்னாபிரிக்கா அணிகளுக்கிடையிலான முதல் டெஸ்ட் போட்டியில் தென்னாபிரிக்க அணி வீரர்கள் மெதுவாக பந்து வீசியது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இதை தொடர்ந்து போட்டி நடுவர் றோஷான் மகாநாம விசாரணை நடத்தி தென்னாபிரிக்க அணித்தலைவர் சிமித்துக்கு போட்டி கட்டணத்தில் 20 சதவீதமும், மற்ற வீரர்களுக்கு 10 சதவீதமும் அபராதமாக விதித்தார். (5)

### அதிர்ச்சியில் பாக்.தேர்வாளர்கள்

பங்களாதேஷ் அணிக்கு எதிரான தொடருக்கான பாகிஸ்தான் அணி தேர்வுக் கூட்டத்தில் அந்த அணியின் தலைவர் சோயிப் மலிக் பங்கேற்கவில்லை. அவர் மும்பயில் இருப் பது தெரிந்து தேர்வாளர்கள் அதிர்ச்சியில் உள்ளனர்.

தாயாருக்கு உடல்நிலை சரியில்லை என்று தெரிவித்த அவர் இந்தியா சென்றது பற்றி தகவல் தெரிவிக்காததால் அவர்கள் குழப்பத்தில் உள்ளனர். ஐதராபாத் பெண் தன்னை திருமணம் செய்ததாக கூறிய குற்றச் சாட்டு குறித்து சட்டப்படி நடவடிக்கை எடுக்கவே அவர் இந்தியா வந்துள்ளதாக கூறப் படுகிறது. (5)

# ஆஸி.துணைத்தலைவராக மைக்கல் கிளார்க் நியமனம்

(சிட்னி)

அவுஸ்திரேலிய கிரிக்கெற் அணியின் துணைத் தலைவராக மைக்கல் கிளார்க் நியமிக்கப்பட்டுள்ளார். மேற்கிந்திய தீவுக ளுக்கு சுற்றுப்பயணம் செய்யவுள்ள அவுஸ் திரே லிய அணி அறிவிக்கப்பட்டுள்ளது. ரிக்கி பொண்டிங் தலைமையிலான இந்த அணியில் மைக்கல் கிளார்க் துணைத்தலைவராக அறிவிக் கப்பட்டுள்ளார்.

மைக்கல் ஹஸி பெயரும் துணைத்தலைவராக பரிசீலிக்கப்பட்ட நிலையில் கிளார்க் இந்த பதவிக்காக தேர்வு செய்யப்பட்டதாக அவுஸ்திரேலிய தேர்வுக்குழுவினர் தெரிவித் துள் ளனர்.

மைக்கல் ஹஸியின் சகோதரர் டேவிட் ஹஸி ஒருநாள் போட்டி அணியில் சேர்க்கப் பட்டுள்ளார். சைமன் கட்டிச் அணியில் சேர்க் கப்படவில்லை. ஸ்டுவெட் மக்கில் மீண்டும் அணியில் சோக்கப்பட்டுள்ளார். ஒருநாள் போட்டிக்கான அணியில் நதன் பிரக்கன் மீண்டும் சேர்க்கப்பட்டுள்ளார்.

டெஸ்ட் அணி விபரம் வருமாறு,

பொண்டிங் (அணித்தலைவர்), மைக்கல் கிளார்க், ஹைடன், ஹடிச், சைமண்ட்ஸ், மக்கில், பிரெட்லீ, ஹஸி, ஜேக்ஸ்ஜோன்சன், அஸ்லே நோப்கே, ஸ்டுவர்ட் கிளார்க், ஹஸன், ஹில்பென்ஹஸ்.

**ஒருநாள் போட்டிக்கான அணி விவரம்**

பொன்டிங் (அணித்தலைவர்), மைக்கல் கிளார்க், ஹைடன், சைமண்ட்ஸ், ஹடின், ஹோப்ஸ், டேவிட் ஹஸி, பிரெட்லீ, ஜோன்சன், ஸ்டுவெர்ட் கிளார்க், கமரூன் ஒயிட். (5)

# என்னை விமர்சித்தவர்களுக்கு அதிரடியால் பதிலடி கொடுத்தேன்

## வீரேந்திர சேவாக் தெரிவிப்பு

(புதுடில்லி)

சென்னை டெஸ்டில் அதிரடியாக விளையாடி உலக சாதனை படைத்ததன் மூலம், தன்னை விமர்சித்தவர்களுக்கு நல்ல பதிலடி




கொடுத்துள்ளதாக சேவாக் தெரிவித்துள்ளார்.

டெஸ்ட் போட்டிகளில் சரியாக விளையாடவில்லை என்று கூறி இந்திய வீரர் சேவாக் அணியிலிருந்து சுமார் ஓராண்டாக நீக்கப்பட்டிருந்தார். அவுஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் மீண்டும் இடம்பிடித்த சேவாக் அடிலெய்டில் சதமடித்து திறமையை நிரூபித்தார். சென்னையில் நடந்த தென்னா பிரிக்காவுக்கு எதிரான முதல் டெஸ்டில் அதி வேகமாக 300ஓட்டங்கள்எடுத்துபுதிய உலகசாதனை படைத்து மிரட்டினார். டெஸ்ட் போட்டிகளில் ஒரு இன்னிங்ஸில் மிக அதிக ஓட்டங்கள் எடுத்த இந்திய வீரர் என்ற பெருமையையும் பெற்றார். ஐ.பி.எல், "டில்லி டேர் டெவில்ஸ்" அணியின் சீருடையை அறிமுகப் படுத்தும் நிகழ்ச்சி டில்லியில் நேற்று முன்தினம் நடந்தது.

இந் நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அவ் அணியின் தலைவர் சேவாக் கூறியது,

ஒருநாள் போட்டிகளில் நான் மிகவும் நேர்மறையானவனாக இருந்து வருகிறேன். அதை மாற்ற வேண்டும் என்று நினைக்கிறேன். எனவே வரவிருக்கிற ஒருநாள் போட்டிகளில் 'சென்னை டெஸ்டில் விளையாடியதைப் போல் விளையாடப்போகிறேன். என்னை டெஸ்ட் அணியில் எதற்காக வைத்திருக்கிறார்கள்? என்று பலரும் கேட்டார்கள். சென்னை டெஸ்டில் அவர்களுடைய விமர்சனங்களுக்கு நல்ல பதிலடி கொடுத்தது மகிழ்ச்சியாக இருக்கிறது. கடந்த முறை அகமதாபாத்தில் இலங்கைக்கு எதிராக விளையாடிய போட்டியில் சுழல் பந்து வீச்சு நன்றாக எடுபட்டதால் நான்கு நாட்களில் வெற்றி பெற்றோம். இம்முறையும் அதே போன்று வெற்றி பெறுவோம் என்று நினைக்கிறேன்.

ஐ.பி.எல், டில்லி அணியில் நான் இருப்பது மகிழ்ச்சியாக இருக்கிறது. "இருபது-20" கிரிக்கெற் முற்றிலும் புதுமையானது. டெஸ்ட் போட்டியில் விளை யாடும் பாணியிலிருந்து "இருபது-20" போட்டியில் அதிர டியாக விளையாடும் பாணிக்கு எளிதாக மாறிவிடுவேன் என்று நினைக்கிறேன். பாகிஸ்தான் மற்றும் அவுஸ்திரேலிய வீரர்கள் எங்கள் அணிக்காக விளையாட முடியாத சூழ் நிலை ஏற்பட்டாலும் கவலையில்லை. எங்க ளுக்கு மாற்று வழிகள் நிறைய உள்ளன. ஆசிப் இல்லையென்றால் மெக்ராத் இருக்கிறார். இவர்கள் மட்டுமன்றி உள்ளூர் வீரர்கள் வேறு இருக்கிறார்கள். அவர்களுக்கு நல்ல வாய்ப்புகள் வழங்கப் படும்.

வெளிநாட்டு அணிகளைச் சேர்ந்த வீரர்கள் ஐ.பி.எல் அணிகளில் இருப்பது பலனுள்ளதாக இருக்கும். சச்சினையும், கங்குலி யையும் எப்படி ஆட்டமிழப்பு செய்வது என்று அவர்கள் சொல்லி தருவார்கள். பொன்டிங்கையும், சைமண்ட்சையும் எப்படி ஆட்டமிழப்பு செய்வது என்று நாங்கள் சொல்லி தருவோம். இவ்வாறு சேவாக் கூறினார். (5)

# ஐ.சி.சி.டெஸ்ட் தரவரிசையில் சேவாக் கிடு கிடு முன்னேற்றம்

(டுபாய்)

டெஸ்ட் கிரிக்கெற் துடுப்பாட்ட தர வரிசையில் இந்திய வீரர் சேவாக் அதிரடியாக முன்னேற்றம் கண்டுள்ளார். டெஸ்ட் கிரிக்கெற் போட்டி தரவரிசைப்பட்டியலை சர்வ தேச கிரிக்கெற் சபை (ஐ.சி.சி) நேற்று முன்தினம் வெளியிட்டுள்ளது.


தென்னாபிரிக்காவுக்கு எதிராக சென்னையில் நடந்த முதல் டெஸ்ட் போட்டியில் முச் சதம் அடித்த இந்திய ஆரம்ப வீரர் சேவாக் துடுப்பாட்ட தர வரிசையில் 13 இடங்கள் முன் னேறி 12ஆவது இடத்தை பிடித்துள்ளார். இந்திய வீரர்களில் அவர் தான் முதல் இடத் தில் உள்ளார். அவர் முதல் 10 இடத்துக் குள் முன்னேற வாய்ப்புள்ளது.

தென்னாபிரிக்காவுக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் சதம் அடித்ததுடன் 10 ஆயிரம் ஓட்டங்களைக் கடந்த டிராவிட் 2 இடங் கள் முன்னேறி 13ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ளார்.

டெண்டுல்கர் 3 இடங்கள் பின்தங்கி 15 ஆவது இடத்துக்கு தள்ளப்பட்டுள்ளார். லக்ஸ்மன் ஒரு இடம் சறுக்கல் கண்டு 18ஆவது இடம் பெற்றுள்ளார். தென்னாபிரிக்கா அணி வீரர்கள் அம்லா 10 இடங்கள் முன்னேறி 24 ஆவது இடமும், மக்கன்சி 26 இடங்கள் முன்னேறி 36வது இடமும் பிடித்துள்ளனர்.

பந்து வீச்சாளர்கள் வரிசையில் இந்திய வீரர் கும்ளே 10ஆவது இடத்தில் இருக்கிறார். ஹர்பஜன்சிங் 24ஆவது இடத்தில் உள்ளார். சகல துறை வீரர்கள் வரிசையில் இந்திய வீரர் பதான் 7ஆவது இடத்தில் உள்ளார்.

டெஸ்ட் துடுப்பாட்ட வரிசையில் முதல் பத்து இடங்களில் உள்ளவர்கள் முறையே சங்கக்காரா (இலங்கை), ஹஸி (ஆஸி), பொன்டிங் (ஆஸி), மொகமட் யூசுப் (பாக்.), ஜக்கலிஸ் (தெ.ஆ), ஹைடன் (ஆஸி), மஹேல ஜெயவர்தனா (இலங்கை), யூனிஸ் கான் (பாக்). சந்தர்போல் (மே.தீவு) மற்றும் பீற்றர்சன் (இங்கி) ஆகியோர் உள்ளனர்.




பந்துவீச்சில் முதல் பத்து இடங்களில் முறையே முரளிதரன் (இலங்கை). ஸ்ரை யன் (தொ.ஆபி), ஸ்ருவெட் கிளார்க் (ஆஸி) பிரெட்லீ (ஆஸி), நிற்னி (தெ.ஆ.). கும்ளே (இந்தியா), வாஸ் (இலங்கை), பொன்ட் (நியூசி). அக்தர் (பாக்.), சயிட்பொத்தம் (இங்கி). (5)

> கொள்கையில் பரிபூரண நம்பிக்கை அவசியம் தான் ஆனால் அது குருட்டுத்தனமாக இருந்து விடக்கூடாது.
>
> –ஜேம்ஸ் ஆவ்பரி

வலம்புரி

## 'கறைபடியாத கரங்கள்' குழுவில் கறைபடிந்த கரங்கள் வேண்டாம்

யாழ் .குடாநாட்டில், ஊழல்கள் அற்ற நிர்வாகத்தை மேற்கொள்ளும் பொருட்டு கறை படியாத கரங்கள் (Clean hands) என்ற பெயரில் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு அமைக்கப்படவுள்ளதாக யாழ். மாவட்ட அரச அதிபர் கே. கணேஷ் அறிவித்துள்ளார்.

யாழ் .மாவட்டத்தில் இயங்கும்சகல அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் நேர்மையுடன் செயற்பட வேண்டும் என்பதை நோக்காகக் கொண்டு இக்குழு அமைக்கப்படவுள்ளமை வரவேற்கத்தக்க விடயமாகும்.

இக்குழுவை அமைப்பதில் யாழ். அரச அதிபர் தீவிர முயற்சி மேற்கொண்டு வருகின்றார். யாழ்ப்பாண அரச அதிபர் கே. கணேஷ் அவர்கள் , யாழ்ப்பாண மக்களின் கஷ்ட நிலைகளைப் போக்கும் வகையில் பல்வேறு திட்டங்களை நடைமுறைப் படுத்தி வருகின்றார். இவை மக்களால் போற்றப் படுகின்றன.

நேரம் பாராது இரவு, பகலாக கடமையாற்றும் அவரின் சேவை சமகால சூழ்நிலையில் யாழ்ப்பாண மக்கள் செய்த பெரும்பேறு என்றே கருத வேண்டும்.

தனது வேலைப்பளுவின் மத்தியிலும் பொது சன உறவை மேம்படுத்துவதிலும் யாழ். மாவட்ட செயலகத்தை சமூக மயப்படுத்துவதிலும் அவர் காட்டும் ஆர்வமும் ஈடுபாடும் காத்திரமானவை.

மாணவர் கௌரவிப்பு, கல்வியாளர் கௌரவிப்பு, பொது வைபவங்கள் மற்றும் சமூக அமைப்புகளின் நிகழ்வுகள் போன்றவற்றில் அவர் கலந்து கொண்டு நிகழ்வுகளைக் கௌரவிப்பதும், மாணவர்களை ஊக்குவிப்பதும் அவரின் தாராள சிந்தனையினதும், நிதானமும், பொறுமையும், மக்களுடன் இனிமையாகப் பழகும் பக்குவத்தினதும் வெளிப்பாடாகக் கருதப்படுகிறது. இதனைப் பொது மக்கள் வியந்து பேசுகின் றனர்.

பொது மக்களுடன் பழகும் அதிகாரிகளினாலேயே பொது மக்களின் பிரச்சினையை அறியவும், அவற்றைத் தீர்க்கவும் முடியும் என்ற தத்துவத்தின் அடிப்படையில் ,

யாழ். அரச அதிபரினால் அமைக்கப்படும் கறை படியாத கரங்கள் என்ற மாவட்டக்குழு மூலமாக எல்லா அரச, அரசசார்பற்ற அமைப்புகளும் மக்கள் மயப்படும் வாய்ப்புகள் அதிகரிக்கவும் அதனூடாக பொதுமக்கள் தமது தேவைகளை காலதாமதமின்றியும், நேர்மைத் திறத்துடனும் பூர்த்தி செய்து கொள்ளவும் வழி ஏற்படும் என நம்பலாம்.

அதே நேரம் 'கறைபடியாத கரங்கள்' குழுவில் பின்வரும் இயல்புகளும் பணிகளும் இருக்க வேண்டுமென பொதுமக்கள் எதிர்பார்க்கின்றனர். அவை,

✪ கறைபடியாத கரங்களில் கறைபடிந்த கரங்கள் அங்கம்பெறுவதை இம்மியும் அனுமதிக்கலாகாது.

✪ பிரஸ்தாப குழு, மாதத்தில் ஒரு தடவையேனும் பொதுமக்களின் குறைபாட்டை கேட்டறிந்து அவற்றை உடனடியாக நிவர்த்திக்கும் வகையில் பொது மக்களுடனான சந்திப்பை ஏற்படுத்த வேண்டும்.

✪ கறைபடியாத குழு, திணைக்கள அதிகாரிகள் மற்றும் பணியாளர்கள் தொடர்பில் பொதுமக்களின் முறைப்பாட்டைப் பெறுவதற்கு ஏற்பாடு செய்வதுடன் அது தொடர்பில் இரகசியம் பேணுதல், சம்பந்தப்பட்டவர்கள் மீது விசாரணை நடத்தி உரிய நடவடிக்கை எடுத்தல் என்பவற்றைச் செய்தல் வேண்டும்.

✪ குழுவின் செயற்பாடுகள், நடவடிக்கைகள் தீர்த்து வைத்த பொது மக்களின் பிரச்சினைகளை ஊடகவியலாளர் மாநாட்டின் மூலம் தெரியப்படுத்தி, அவற்றை ஊடகங்களில் வெளிப்படுத்தி பொதுமக்கள் மற்றும் அரச பணியாளர்களை விழிப்படையச் செய்தல் கட்டாயமானதாகும்.

மேற்கூறிய முக்கிய சில விடயங்களை நிறைவேற்றிக் கொள்வதன் மூலம், கறைபடியாத கரங்கள் என்ற மாவட்டக் குழு தனது இலக்கை நிறைவேற்றவும் அதன் மூலம் பொது மக்கள் நன்மை பெறவும் உதவ முடியும்.

# இந்தியாவின் தலையீடு காரணமாகவே இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண முடியவில்லை

## பிரித்தானிய குழுவிடம் சோமவன்ச தெரிவிப்பு

(கொழும்பு)

இனத்துவ அடிப்படையில் அதிகாரத்தை பரவலாக்குவதன்மூலம் வடக்கு கிழக்கில் வாழும் தமிழ் மக்கள் , இலங்கையில் ஏனைய பிரதேசங்களில் வாழும் தமிழ் மக்களிட மிருந்து பிரிக்கப்பட்டு



விடுவார்கள் . எனவே தான் 13 ஆவது திருத்த முன்னெடுப்பைத் தாம் எதிர்ப்பதாக ஜே.வி.பிதெரிவித்துள்ளது.

இலங்கைஉட்பட தெற்காசிய பிராந்திய நாடுகளின் உள்விவ காரங்களில் தலையிடும் இந்தியாவின் கொள்கையையும் கொள்கை வகுப்பா ளர்களை யுமே எதிர்ப்பதாக இலங்கை வந்துள்ள பிரித்தானிய பாரா ளுமன்ற உறுப்பினர் குழுவிடம் ஜே.வி.பி தெரிவித்துள்ளது. இலங்கைக்கு விஜயத்தை மேற்கொண்டுள்ள பிரித்தானிய பாராளுமன்ற உறுப் பினர்களான அன்ட்ரூலேவ், அன்ட்ரூ ஜோர்ஜ், ஸ்டீபன் ஹெமண்ட் மற்றும் கலாநிதி அசோக் குமார் ஆகி யோர் திங்கட் கிழமை பத்திரமுல்லையில் உள்ள ஜே.வி. பிதலைமையலுவலகத்தில் அதன் தலைவர் சோமவன்ச அமர சிங்கவைச் சந்தித்து கலந்துரையாடியபோதே இக் கருத்து தெரிவிக்கப் பட்டுள்ளது.

இலங்கையின் தேசிய பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கே தமது குழு முயற்சிகளை எடுத்து வருவதாக பிரித்தானிய எம். பி. அன்ரூலேவ் தெரிவித்துள்ளார். இதற்குப் பதிலளித்துள்ள சோமவன்ச அமரசிங்க

இலங்கையில்ஆட்சிக்குவந்தஅனைத்து அரசாங்கங்களையும் விடுதலைப் புலிகளும் இந்திய அரசியல் கொள் கைகளை வகுப்பவர்களும் இணைந்து நெருக் கடியில்தள்ளி விட்டனர். இதனாலேயேதீர்வு காண முடியாது போனது .அத்தோடு சர்வதேச சமூகமும் எமது பிரச்சினையில் தலையிட்டு மேலும் மேலும் நெருக்கடிக்குள் தள்ளி விட்டுள்ளது.

தேசிய பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காக அமைக்கப்பட்ட சர்வகட்சிமாநாட்டை ஏற்றுக்கொள்ள முடியாது . காரணம் அதில் அனைத்துக் கட்சிகளினதும் பங்களிப்பு இருக்கவில்லை. இலங்கை அரசியலமைப்பை அதிகாரப் பரவலாக்கல் திசையை நோக்கிக் கொண்டு செல்வதற்கு எவருக்கும் மக்கள் ஆணை கிடைக்கவில்லை . நிர்வாகத்தை பரவலாக்கி அதன் மூலம் பிரச்சினைக்கு திர்வு காணலாம். அதை விடுத்து இனத்துவ அடிப்படையில் அதிகாரத்தைப் பரவலாக்குவதன மூலம் வடக்கு கிழக்கில் வாழும் தமிழ் மக்கள் ஏனைய பிரதேசங்களில் வாழும் தமிழ் மக்களிட மிருந்து பிரியும் நிலை உருவாகும். ஜே.வி.பி க்கு தமிழ் முஸ்லிம் தரப்பு ஆதரவு உள்ளதென பிரிட்டிஷ் எம்.பிக்களின் கேள்விக்கு பதிலளித்துள்ள சோமவன்ச அமரசிங்க தமது கட்சிக்கு பாராளுமன்ற மாகாண சபை பிரதேச சபைகளில் 500 உறுப்பினர்கள் இருப் பதாகவும் அவர்களில் 14 பேர் தமிழ் மற்றும் முஸ்லிம்களௌன்றும் தெரிவித்துள்ளார். (அ-5)

# நாடாளுமன்ற பதில் செயலாளர் நியமனம் சட்ட விரோதமானது

## சபாநாயகருக்கு ஐ.தே.க.கடிதம்

அரசியலமைப்புச் சபையை நிறுவாமல் பாராளுமன்றத்திற்கு பதில் செயலாளர் நாயகம் நியமிக்கப்பட்டுள்ளமை பாராளுமன்றத்திற்குள் முரண் பாடு களை தோற்றுவிக்கும் நடவடிக்கை என்பது மட்டுமல்லாது இந்த நியமனம் சட்டவிரோத மானதாகும் என்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக்கட்சி தெரிவித்துள்ளது. இந்த நியமனம்தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சிதனது நிலைப்பாட்டை சபாநாயகர் வி.ஜே.மு லொக்கு பண்டார விற்கு கடிதம் மூலமாகஅறிவித்துள்ளதாக எதிர்க்கட்சியின் பிரதம கொறடாவான பாராளுமன்ற உறுப் பினர் ஜோசப் மைக்கல்பெரேரா தெரிவித்தார்.

அரசியலமைப்பு சபையை நிறுவாமல் சட்டவிரோதமான முறையில் பாராளு மன்ற செயலாளர் நாயகமாக நியமிக்கப்பட்டுள்ளமைக்கு எதிராகபாராளுமன்றத்திற்கு உள்ளேயும் வெளியேயும் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபடுவோம் என்பதுடன் அதற்கெதிராக சட்ட நடவடிக்கை கள் எடுக்கப்படும் என்றும் சபாநாயகருக்கு அனுப்பிவைக்கப் பட்டுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதே வேளை கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று முன் தினம் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் ஐக்கிய தேசியக்கட்சியின் பொதுச்செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க கருத்து தெரிவிக்கையில்,

பாராளுமன்ற த்தின் பதில்செயலாளர் நாயகமா க தம்மிக்க கித்துல்கொடவின் தகுதி தொடர்பாகவோ அல்லது அவர் நியமிக்கப் பட்டமை தொடர்பாகவோ எமக்கு எவ்வித மான பிரச்சினைகளும் இல்லை. எனினும் அவர் நியமிக்கப்பட்ட முறை தவறா னது என் பதையே சுட்டிக் காட்டுகின்றோம்.

அரசியலமைப்பு சபையை நிறுவாமல் பாராளுமன்றத்திற்கு பதில் செயலாளர் நாயகம் நியமிக்கப்பட்டுள்ளமை பாராளுமன்றத்திற்குள் முரண்பாடுகளைக் தோற்றுவிக்கும். பாராளுமன்றத்திற்குப்பதிலளிக்கவேண்டிய ஜனாதிபதி யே சட்டத்தை மீறி செயற் பட்டுள்ளார் என்பதனால் அரசியலமைப்பு சபை நிறவப்படல் வேண்டும். (அ-5)

# இலங்கை பொருளாதார வளர்ச்சியைஅடைவதற்கு அரச செலவீனங்களைக் கட்டுப்படுத்த வேண்டும்

## ஐ.நா.ஆய்வில் தெரிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கம் தனது செலவுகளைக் குறைத்து அரச நிறுவனங்களில் காணப் படும் வீண்விரயங்கள், இழப்புக்களை தடுப்பதன் மூலம் மாத்திரமே சாத்தியமான பொருளாதார வளர்ச்சியை அடைய முடியும் என்று ஐ.நா.வின் பொருளாதார சமூக ஆய்வு தெரிவித்துள்ளது. உள்நாட்டு மோதல்கள் மற்றும் எண்ணெய் விலை அதிகரிப்புக்கு மத்தியிலும் 2007 ஆம் ஆண்டு இலங்கையின் மொத்த உள்நாட்டு உற் பத்தி 6.7 வீதத்தால் அதிகரித்துள் ளது. அதேவேளை, நாட்டின் பணவீக்கமா னது 10 இல் இருந்து 15. 0 சதவீத மாக அதிகரித்துள்ளதாகவும் இதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தெற்காசிய பிராந்தியத்திற்கான ஐ.நாவின் சமூக பொருளாதார ஆய் வறிக்கை நேற்று முன்தினம் இலங்கை மன்றக் கல்லூரியில் வெளியிடப்பட்டது.

ஆசிய பசுபிக் பிராந்தியத்தின் சமூக பொருளாதாரம் தொடர்பில் 60 ஆவது ஆண்டாக ஐ.நா. மேற்கொண்ட ஆய் வில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

தொழில் மற்றும் சேவைத்துறைகளின் வளர்ச்சி குறைவடைந்துள்ளது. மோசமான காலநிலை காரணமாக விவசாய வளர்ச்சியிலும் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

மறுபுறம் இலங்கையின் பணவீக்கம் தொடர்ந்து அதிகரித்து வருகின்றது. 2006 ஆம் ஆண்டு 10 வீதமாக இருந்த பணவீக்கம் 2007 ஆம் ஆண்டில் 15.8 வீதமாக அதிகரித்துள்ளது. இதனால்பொருளாதாரத்தில் ஏற்பட்ட உறுதியற்ற தன்மை காரணமாக பொருட்களின் விலையேற்றமும் நாணய மாற்றின் வீழ்ச்சியும் ஏற்பட்டுள்ளது.

அரசாங்கம் கடந்த ஆண்டு அக்டோபரில் 500 மில்லியன் அமெரிக்க டொலர் களையும் அண்மையில்300 மில்லியன் டொலர்களையும் வெளிநாடுகளி லிருந்து கடனாக ப்பெற்றுள்ளது. இக்கடன்களால் ஏற்படும் சுமையிலிருந்து தப்பித்துக்கொள் வதற்கு 5 ஆண்டுகளுக்கு நாட் டின் தேசிய உற்பத்தியை துரிதமாக அதி கரிப்பதோடு வரவு செலவுதிட்டத்தில் தேவை யற்ற செலவுகளை கட்டுப்படுத்துவது அவசியமாகும்.

இதேவேளை, அரச நிறுவனங்களில் ஏற்படும் விரயங்கள், இழப்புக்கள் பொருளாதாரத்தில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. கடந்த ஆண்டு இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தில் 3 பில்லியன் ரூபாவும்இலங்கை மின்சார சபையில் 15 பில்லியன் ரூபாவும் இலங்கைபோக்குவரத்து சபையில் 4 பில்லியன் ரூபாவும்அஞ்சல்திணைக்களத்தில் 2.5 பில்லியன் ரூபாவும் இழப்பு ஏற்பட்டுள்ள து.

இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 70 வீதமானவை சர்வதேச வர்த்தகத்துடன் சம்பந்த முடையது.

எனவே இலங்கை சாத்தியமான பொருளாதார வளர்ச்சியை அடைவதற்கு அரசாங்கம் செலவீனங்களை கட்டுப்படுத்துவதும் அரச நிறுவனங்களின் விரயமும் தடுக்கப்படுவது அவசியமாகும். (அ-5)

## தெரிந்த கதையும் தெரியாத அர்த்தமும்

ஓலைச் சுவடிகள் 07

நம்பிக்கைகளும் ஆசாரங்களும்

### *காலையில் கோலமிடுவது எதற்கு?*

அதிகாலையில் முற்றம்கூட்டி, தெளித்த பின்வாசலில் அழகான கோலமிடுவதை நாம் இன்றும் செய்து வருகின்றோம்.

இதில் தனிப்பட்ட சிறப்புக்கள் எதுவும் இல்லையானாலும் இதில் ஓர் பெரிய பௌதீக உண்மை அடங்கியிருக்கிறது. மனிதன் பிற உயிரினங்களிடம் கருணை காட்டி வாழ்வதற்கு அநேக உதாரணங்கள் நம்மிடையே உண்டு. நாம் உணவாகப் பயன்படுத்தும் அரிசி மாவே முற் காலத்தில் கோலம் போடும் மாவாக இருந்தது.

இன்றும் சிலராவது அரிசி மாவில் கோலம் போடுகின்றனர். நாம் உணவருந்த முன் எறும்பு முதலிய சிறுபிராணிகளுக்கு உணவளிப்பது என்ற மனித தர்மத்தின் பாகமே கோலம் போடுதலாகும் . ஆனால் கோலம் போட்ட இடத்தில் எப்போதும் எறும்பு முதலியவை புகுந்து மாவை உண்ணுவதை நீங்கள் கண்டிருப்பீர்கள்.

## சிறைச்...

அதனைப் பொருட்படுத்தவில்லை. இதனையடுத்தே துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாக சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் மேஜர் ஜெனரல் வஜிர விஜயவர்த்தன தெரிவித்துள்ளார்.

கைதிகள் தப்பியோடுவதற்கு உதவி புரிந்தவர்கள் தொடர்பாக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் சிறைச்சாலை ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

இந்தத் துப்பாக்கிப் பிரயோகத்தில் நால்வர் கொல்லப்பட்டதுடன் மூன்றுபேர் காயமடைந்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார். காயமடைந்தவர்கள் பொலிஸ் பாதுகாப்புடன் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ச-2)

# நீதித்துறையின் அறிவுறுத்தலுக்கமைய சரணடைந்தோருக்கு உதவ வேண்டும்

## யுனிசெவ்விடம் யாழ்.நீதிபதி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

நீதித் துறையின் கீழ் அதன் அறிவுறுத்தல்களுக்கு அமைய நீதிமன்றப் பாதுகாப்பில் உள்ளோருக்கு புனர்வாழ்வு வழங்கினாலேயே மக்களுக்கு நம்பகத்தன்மை ஏற்படும் என யாழ்.மாவட்ட நீதிபதி இ.த.விக்னராஜா தெரிவித்துள்ளார்.

யுனிசெவ் அதிகாரிகள் குழுவொன்று யாழ்.நீதிபதியைச் சந்தித்துக் கலந்துரையாடியது. இச் சந்திப்பில் உயிர் அச்சுறுத்தல் காரணமாக யாழ்.மனித உரிமைகள் ஆணைக் குழுவில் சரணடைந்து யாழ்.நீதிமன்றப் பாதுகாப்பில் உள்ளவர்களுக்குப் புனர்வாழ்வளிப்பது தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டது.

அதன்போதே நீதிபதி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். இதேவேளை உயிர் அச்சுறுத்தல் காரணமாக நீதிமன்றப் பாதுகாப்பில் உள்ளவர்களுக்குப் புனர்வாழ்வளிப்பது குறித்து ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுப்பது தொடர்பாக தாம் அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாக யாழ்.மாவட்ட நீதிபதி இ.த.விக்னராஜாவிடம் யுனிசெவ் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ச-5)

## சமூக சேவையாளர் பூராசா காலமானார்

(யாழ்ப்பாணம்)

சமூக சேவையாளரும் தமிழ்ப் பற்றாளருமாகிய சுப்பிரமணியம் ஜோசேப் பூராசா நேற்று



முன்தினம் காலமானார்.

புங்குடுதீவைச் சேர்ந்த இவர், ஓய்வு பெற்ற அதிபர் ஆவார். புங்குடுதீவுக் கிராமத்தின் அபிவிருத்திப் பணியில் அதீத ஈடுபாடு கொண்ட இவர், 1990 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் தீவுப் பகுதியில் ஏற்பட்ட இடப்பெயர்வின்போது இடம்பெயர்ந்த மக்களின் நலன் காப்பதில் பெரும் பங்காற்றினார்.

வலம்புரியின் தரிசனத்தில் இவரின் கருத்துக்கள் அண்மையில் வெளிவந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. அன்னாரின் பூதவுடல் இல.91/11, இந்து மகளிர் ஒழுங்கை, கந்தர் மடத்திலுள்ள இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது. (ரு)

# பயண அனுமதி பெறுவதற்கான ஆவணங்களின் இரு பிரதிகள் சமர்ப்பித்தால் போதுமானது

## சிவில் நிர்வாக இணைப்பாளர் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வெளிமாவட்டங்களுக்கான பயண அனுமதிப் பத்திரம் பெறுவதற்கு விண்ணப்பப் படிவம் உட்பட உரிய ஆவணங்களின் தலா 2 பிரதிகள் சமர்ப்பித்தால் போதுமானது என யாழ்.சிவில் நிர்வாக அலுவலக இணைப்பாளர் மேஜர் அருண தெரிவித்தார்.

இந் நடைமுறை சகல இராணுவ சிவில் அலுவலகங்களிலும் நடைமுறைப்படுத்தப்படும் எனவும் கூறினார். இதன் பிரகாரம் பயண அனுமதிப் பத்திரத்திற்கான விண்ணப் படிவம், கோரிக்கைக் கடிதம், குடும்ப அட்டை, தேசிய அடையாள அட்டை ஆகியவற்றின் பிரதி மற்றும் கோரப்படும் ஆவணங்களின் பிரதியுடன் கூடிய இரு தொகுதிகளை மாத்திரம் சமர்ப்பித்தால் போதுமென அவர் குறிப்பிட்டார்.

ஆனால் தற்போது ஒவ்வொரு பகுதி இராணுவத்தினராலும் வெவ்வேறு முறைகளில் 4 அல்லது 5 பிரதிகள் கோரப்படுவதாகவும் தெரிவித்த யாழ்.சிவில் நிர்வாக அலுவலக இணைப்பாளர் மேஜர் அருண அவ்வாறு அதிக பிரதிகளைச் சமர்ப்பிக்க வேண்டிய தேவையில்லை எனவும் கூறினார். (ச-5)

## அநுராதபுரம்...

ஹெப்பிட்டிக்கொல்லாவவின் தூரப் பிரதேச பிரிவுக்குப் பாதுகாப்பாகவும் ஹெப்பிட்டிக்கொல்லாவவிலிருந்து துட்டுவேவ மற்றும் நிகவேவ பகுதிகளுக்குச் செல்லும் 22 கிலோ மீற்றர் வீதியிலும் அதிரடிப்படையினர் நிறுத்தப்பட்டுள்ளனர்.

அந்த வீதிகள் அனைத்தும் அதி உயர் பாதுகாப்பு வலயங்களாக அறிவிக்கப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ச-5)

## 'பிரபாகரன்' திரைப்படத்தை...

கொண்டதாகவுள்ளது.

இலங்கையில் நடைபெற்று வரும்இனப் படுகொலையால் இலட்சக் கணக்கான தமிழர்கள் புலம்பெயர்ந்து வெளிநாடுகளிலும் தமிழ்நாட்டிலும் அகதிகளாக அல்லல்படுகின்றனர்.

ஆனால் 'பிரபாகரன்' என்ற பெயரிலான சிங்களத் திரைப்படத்திலோ, புலிகளின் போரினால் மிக மோசமாக அகதி முகாம்களில் சிங்கள மக்கள் அவதிப்படுவதாகப் பொய்யாகச் சித்திரிக்கப்படுகின்ற காட்சிகள் உள்ளன.

இந் நிலையில் தமிழ்நாடு திரைப்படத் தயாரிப்பாளர் சங்கத்தினரிடம் ஜெமினி கலையகத்தினர் சென்னையிலுள்ள இலங்கைத் துணைத் தூதரகத்தினர் அப்படத்தின் பிரதிகளைத் தம்மிடமோ அல்லது தாம் குறிப்பிடும் நபர்களிடமோ ஒப்படைக்க வேண்டும் என்று மிகவும் அழுத்தம் கொடுத்து வருவதாகத் தெரிவித்துள்ளனர்.

தமிழ் மக்களது உணர்வுகளைப் புறந்தள்ளிவிட்டு இலங்கைத் துணைத் தூதரகம் இப்படியான செயற்பாடுகளை மேற்கொள்கின்றது. அப்படத்தின் பிரதிகளை வெளியே கொடுத்தால் பல இடங்களில் திரையிட வாய்ப்புண்டு.

இது இலங்கையில் இன மோதலை மேலதிகமாக மிக மோசமாகத் தூண்டி விடும். அதனால் தமிழ்நாட்டில் 1980 களில் நடந்தது போன்ற உணர்வு மிக்கப் போராட்டங்களும் நடைபெறும்.

தமிழ்நாட்டின் ஒட்டுமொத்தச் சட்டம் ஒழுங்கு பாதிக்கப்பட்டு பொதுமக்களினது இயல்பு வாழ்க்கை முற்றாகச் சீர்குலையும். இப்படத்தை வெளியிடுவதற்கு தடைவிதிப்பதுடன் படத்தின் பிரதிகளை எவரிடமும் கொடுக்கக் கூடாது என்று ஜெமினி கலையகத்திற்கு நீதிமன்றம் உத்தரவிட வேண்டும்.

மேலும் இலங்கைத் துணைத் தூதரகத்தின் அழுத்தங்களுக்கு அமைய மத்திய மற்றும் மாநில உள்துறைச் செயலாளர்கள் இந்த விவகாரத்தில் தலையிட்டு ஜெமினி கலையகத்திற்கு உத்தரவிடுவதைத் தடுக்க வேண்டும்.

அத்துடன் இப் படத்தின் பிரதிகள் மற்றும் மின்னணு பேக்கப் உள்ளிட்ட அனைத்து வகையானவற்றையும் மத்திய உள்துறைச் செயலகம் கைப்பற்றி அழிக்க வேண்டும் என்றும் நீதிமன்றம் உத்தரவிடக் கோருகின்றோம் என்று அதில் திருமாவளவன் கோரியுள்ளார். (ச-5)

## படையினரும் புலிகளும்...

முகாம் மற்றும் தங்காலை தோமஸ் படை முகாம் ஆகியவற்றிலிருந்து புலிகளின் பகுதிகள் மீது தொடர்ச்சியான ஷெல் தாக்குதல்களை மேற்கொண்டனர்.

இதன்போது புலிகளின் பகுதியிலிருந்தும் படையினரின் இலக்குகள் மீது எறிகணைத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. சில எறிகணைகள் முருங்கன் அரசினர் வைத்திய சாலை வளாகத்தினுள் வீழ்ந்து வெடித்தன.

இச் சம்பவம் நேற்றுக் காலை 6.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது. இதன்போது 2 கட்டடங்கள் சேதமடைந்துள்ளது. அருகிலுள்ள பாடசாலை வளாகத்தினுள்ளும் எறிகணைகள் வீழ்ந்து வெடித்தபோதும் எவ்வித சேதங்களும் ஏற்படவில்லை.

இத் தாக்குதலை புலிகளே மேற்கொண்டதாகப் படைத் தரப்புத் தெரிவித்துள்ளது. இருதரப்புக்கும் இடையில் தொடர் மோதல்கள் இடம்பெற்ற போதிலும் சேத விபரங்கள் வெளியாகவில்லை. (ச-5)

## ஓ.எல்.பெறுபேறுகள்...

அதிபர்கள் நேற்றுக் காலை பரீட்சைத் திணைக்களத்திற்கு வந்து பரீட்சைப் பெறுபேறுகளைப் பெற்றுச்சென்றுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஏனைய பாடசாலைகளின் பெறுபேறுகளை தபால் மூலம் அனுப்ப நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் பரீட்சைகள் ஆணையாளர் தெரிவித்துள்ளார். இதேவேளை பாடசாலைகளுக்குப் பெறுபேறுகள் கிடைக்கப் பெற்ற பின்னரே இணையத்தளத்தில் பெறுபேறுகளை வெளியிடவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

பரீட்சைப் பெறுபேறுகளை www.doenets.lk என்ற இணையத் தள முகவரி மூலம் பெற்றுக் கொள்ள முடியும். (ச-2)

## சத்துணவுத்...

பொருள்களில் இடம்பெறும் குளறுபடிகளை இல்லாதொழிக்க உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பதுடன் உலக உணவுத் திட்டத்தால் வழங்கப்பட்ட நியமங்களுக்கு அமைய சீராக அத்திட்டத்தை நடைமுறைப்படுத்தி மாணவர்களுக்கு சத்து ணவுகளை வழங்க வேண்டும்.

இவற்றை மீறி மோசடி நடவடிக்கைகளில் ஈடுபட்டால் அதில் ஈடுபடுவோர் மீது விசாரணைகள் நடாத்தப்பட்டு அவர்களின் பதவி பறிக்கப்படும் எனவும் வடமாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் எல்.இளங்கோவன் எச்சரிக்கை விடுத்தார். (ச-5)

## மின்னல்...

இதில் 4 படையினர் அந்த இடத்திலேயே உடல் கருகி உயிரிழந்தனர். 59 படையினர் காயமடைந்தனர் என இராணுவப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். (ச-5)

## கிழக்கு மாகாண சபைத் தேர்தலில்...

கொழும்பில் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான குழுவினருக்கும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூவ் ஹக்கீம் தலைமையிலான குழுவினருக்குமிடையில் நேற்றுச் செவ்வாய்க்கிழமை காலை முதல் மாலை வரை நடைபெற்ற பேச்சுவார்த்தைகளையடுத்துக் கூட்டணி அமைத்து செயற்படுவது குறித்து இரு கட்சிகளும் இணக்கம் கண்டுள்ளன.

மேலும் முஸ்லிம் காங்கிரஸ், ஐக்கிய தேசியக் கட்சியின் யானைச் சின்னத்தில் போட்டியிடவும் முடிபுசெய்துள்ளது. எனினும் முதலமைச்சர் வேட்பாளர் குறித்தும் ஏனைய வேட்பாளர் குறித்தும் தொடர்ந்து ஆலோசனை நடத்தப்பட்டு வருவதாகவும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதிநிதி ஒருவரை முதலமைச்சர் வேட்பாளராக நிறுத்த ஐ.தே.க. இணங்கியிருப்பதாகக் கூறப்படுகின்றது. எனினும் இது அதிகாரபூர்வமாக இதுவரை உறுதி செய்யப்படவில்லை. இது குறித்துத் தொடர் பேச்சுக்கள் நடத்தப்பட்டு வருவதாக முஸ்லிம் காங்கிரஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் மட்டக்களப்பு மாவட்டத்தின் பலம் வாய்ந்தவராகக் கருதப்படும் எம்.எல்.ஏ.எல். ஹிஸ்புல்லா ஆளும் அரசாங்கமான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில்இணைந்துள்ளார்.

நடைபெறவுள்ள கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடும் இவர் ஆளும் அரசாங்கத் தரப்பின் தேர்தல் வேட்பாளர் பட்டியலில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளதாக ஜனாதிபதி மாளிகை தெரிவித்துள்ளது. (ச-5)

## மரண அறிவித்தல்

### சதாசிவம் தர்மராசா (தருமு)



சங்கத்தானை சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் 48/11, தேங்காய் மூலை, கொக்குவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சதாசிவம் தர்மராசா (தருமு) 30.03.2008 அன்று காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சதாசிவம் கனகம்மா தம்பதியரின் அன்பு மகனும், கந்தசாமி, காலஞ்சென்ற நேசம்மாவின் அன்பு மருமகனும், சொர்ணமலரின் அருமைக் கணவரும், குணசீலநாதன், சிந்துஜா, நிலோஜன் ஆகியோரின் அன்புத் தந்தையும், லக்சுமி குமாரின் அன்பு மாமனாரும், சுஜானிகாவின் தாத்தாவும், துரைராசா, சுசிலாதேவி, ஜெயதேவி ஆகியோரின் சகோதரனும், சிவலோகநாதன், சுசிலாதேவி, கிருஷ்ணசாமி, அரியராசா, காலஞ்சென்ற அரியரத்தினம், துளசிமலர், தர்மராசா, ரவிச்சந்திரன், சாந்தகுமார், ஜெயகுமார், விஜியகுமார், ஜெயமலர், நவமலர், இன்பமலர், ஜெயந்திமலர் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (02.04.2008) மு.ப. 10 மணியளவில் நடைபெற்று, அன்னாரின் பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்;
த.குணசீலநாதன் (சீலன்)
மகன்

(987)

## பாராட்டும் வாழ்த்தும்

யாழ்.குட்டியப்புலம் அ.த.க.பாடசாலையின் சிரேஷ்ட ஆசிரியை

திருமதி **ஜெயந்தி தவசீலன்**

அவர்கள் கல்வியியல் முதுமாணிப் பரீட்சையில் சித்தியடைந்தமையையிட்டு எமது பாராட்டையும் வாழ்த்தையும் தெரிவிப்பதுடன், அவர் மென்மேலும் பதவியுயர்வு பெற்று வாழ்வில் சிறப்படைய இறையருளை வேண்டுகின்றோம்.

நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.

க.கணேசராசா ஆசிரியர்
குடும்பத்தினர்

(c-944)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தல் 02.04.2008 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.